விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 13 வியாழக்கிழமை (28.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 222

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## கூட்டு எதிரணியின் பாதயாத்திரைக்கு நீதிமன்றம் இடைக்கால தடைவிதிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணியினர் இன்று வியாழக் கிழமை நடத்தவிருந்த பாதயாத்திரைக்கு இடைக்காலத் தடைவிதித்து கண்டி நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.


மாவனெல்ல பொலிஸார் முன் வைத்த மனு ஒன்றை ஆராய்ந்த பின்னர் இவ்வாறு உத்தரவிட்டுள்ள கண்டி நீதவான் நீதிமன்றம், இந்த பாதயாத்திரையை ஏற்பாடு செய்தவர்களை இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு பணித்துள்ளது.

அதேவேளை, கண்டியில் இன்று காலை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஊக்குவிப்பு வேலைத் தட்டத்தையும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆரம்பிக்குமாறு கண்டி நீதவான் நீதிமன்றம் அறி

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மாணவர்கள் மீது நான் குறை கூறவில்லை

ஆளுநர் கூரே விளக்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மோதல் பிரச்சினையை தமிழ் மாணவர்கள்தான் ஆரம்பித்தனர் என தான் ஒருபோதும் கூறவில்லை என தெரிவித்தவடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்

23ஆம் பக்கம் பார்க்க....

# 26 தமிழர்கள் படுகொலை

# கைதான 6 இராணுவத்தினர் நிரபராதிகள் என விடுவிப்பு

(அநுராதபுரம்)

திருகோணமலை குமாரபுரம் பகுதியில் 26 தமிழர்களின் படுகொலையுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 6 இராணுவத்தினர் நேற்றைய தினம் அநுராதபுரம் மேல் நீதிமன்றில் யூரி சபை முன்பாக நிரபராதிகள் என தீர்ப்பளித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

அகதி முகாமில் நாம் அல்லற்பட

## எமது காணிகளில் இராணுவம் கிரிக்கெட் விளையாடுகின்றது



24ஆம் பக்கம் பார்க்க....

## சிங்கள மாணவர்கள் வராவிடின் எம்மால் எதுவும் செய்ய முடியாது

பொலிஸ்மா அதிபர் கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் சிலர் தொடர்ந்தும் கற்றல் நடவடிக்கைகளில் இருந்து விலகியிருப்பது குறித்து பொலிஸார் எதுவும்செய்யமுடியாதுஎன்றுபொலிஸமா அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் மோதலை அடுத்து தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பல்கலைக்கழகத்தின் சில பீடங்கள் கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

எனினும் பல்கலைக்கழகத்தின் சிங்கள மாணவர்கள் சிலர் இதுவரை தமது வகுப்புகளுக்கு சமுகமளிக்கவில்லை. இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர.

சிங்கள மாணவர்கள் பல்கலைகழக வகுப்புகளுக்கு சமுகமளிக்கா

24ஆம் பக்கம் பார்க்க....

## முதியவர் சடலமாக மீட்பு



24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அரசியலமைப்பு வரைபு எதுவுமில்லை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில் இறைமை மக்களுக்கா தேசத்துக்கா என்பது தொடர்பில் பாராளுமன்றமே தீர்மானம் எடுக்கும். இது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்த வடிவத்தையும் தயாரிக்கவில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனராட்ன தெரிவித்தார்.

நாங்கள் கலந்துரையாடல்கள் ஆலோசனைகள் நடத்துகின்

24ஆம் பக்கம் பார்க்க....

## மாற்றுப் பாதையில் பாதயாத்திரை!

(கொழும்பு)

நீதிமன்ற தீர்ப்புககு மதிப்பளித்து தமது பாதயாத்திரையினை இன்று கண்டியில் ஆரம்பிக்காது கண்டி நகர எல்லைக்கு வெளியே கெட்டம்பே பிரதேசத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

நேற்று கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டபின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும்கண்டி நீதவான் நீதிமன்றம் விடுத்துள்ள பாதயாத்திரை தொடர்பான தடையுத்தரவானது இரவு (நேற்று) 7மணிவரை தனக்கு கிடைக்கவில்லை என்றும், ஏனையவர்கள் மூலம் தனக்கு தெரிந்த வரை கண்டி நகரின் எல்லைக்கு அப்பால் தமக்கு பாதயாத்தி

24ஆம் பக்கம் பார்க்க....




## க.பொ.த (உ/த) வகுப்புகளுக்குத் தடை

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு 12 மணியுடன் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான அனைத்து கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புக்கள் நடத்துதல் தடைசெய்யப்படுவதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது

சுவரொட்டிகள், துண்டுப் பிரசுர

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு கனடா ஊக்கமளிக்கிறது

(கொழும்பு)

இலங்கையில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும் கனடா ஊக்கமளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஸ்ரெஃபன் டியோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அனைத்து சமூ

24ஆம் பக்கம் பார்க்க....

## திஸ்ஸவுக்கு எதிரான விசாரணை நிறைவு!

விரைவில் கைதாக வாய்ப்பு?



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிரான விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தல்

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்திற்கு சமையல் வேலை தெரிந்த ஆண், பெண் தொழிலாளர்கள் தேவை.

தேவைப்படின் தங்குமிட வசதி வழங்கப்படும்

தொடர்புகளுக்கு :
076 5541 472

## காணியுடன் வீடு விற்பனைக்கு

பிரதான வீதி மவுண்கார்மல் றோட் இல. 4இல் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்பு தொ.பே.இல :
077 9779 742

(5443)


# 7 பேரையும் விடுதலை செய்ய மத்தியின் அனுமதி தேவையில்லை

## உச்சநீதிமன்றில் தமிழக அரசு மனு



(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேரையும் விடுதலை செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெறவேண்டிய தேவை இல்லை என உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள சீராய்வு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ள பேரறிவாளன், முருகன், நளினி, சாந்தன், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரை விடுதலை செய்ய முன்னதாக முடிவெடுத்திருந்த தமிழக அரசு, அது தொடர்பில் மத்திய அரசிடம் ஆலோசனை கேட்டிருந்தது.

ஆனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மத்திய அரசு, இவர்களின் விடுதலைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தது. இவ்வழக்கின் தீர்ப்பு கடந்த டிசம்பர் மாதம் 2ஆம் திகதி வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பில் குறித்த ஏழு பேரையும் விடுதலை செய்ய இந்திய குற்றவியல் சட்டத்தின் 435ஆவது பிரிவின் கீழ் மத்திய அரசிடம் ஒப்புதல் பெறவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்ட அதேவேளை, அரசியல் சாசனத்தின் 161ஆவது பிரிவின் கீழ் குறித்த ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கு மாநில அரசுக்கு எவ்வித தடையும் இல்லை என உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது.

இதனால் குறித்த ஏழு பேரையும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்வதற்கு முடிவு எடுத்து மத்திய அரசுக்கு தமிழக அரசு அறிக்கை அனுப்பியிருந்தது. ஆனால் இது தொடர்பாக எந்த ஒரு பதிலையும் மத்திய அரசு அனுப்பவில்லை.

இந்நிலையில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை முன்வைத்து தமிழக அரசு தாக்கல் செய்துள்ள சீராய்வு மனுவில், குறித்த ஏழு பேரின் விடுதலை தொடர்பில் 435ஆவ்து பிரிவின் கீழ் தமிழக அரசு மத்திய அரசிடம் ஆலோசனை கேட்கலாமே தவிர, அதன் அனுமதியைப் பெறத் தேவையில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-11)


# மரண அறிவித்தல்



## திருமதி இராசசௌந்தரி பவாநாதன் (குஞ்சு)

உடுவில் தெற்கு, பாலாவோடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசசௌந்தரி பவாநாதன் கடந்த (25.07.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கச்சி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசா பவாநாதன் அவர்களின் அன்பு மனைவியும், மதுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் - வட மாகாணம்), ஸ்ரீராச்பவன் (அவுஸ்திரேலியா), ஸ்ரீரகுபவன் (இரவுக்கணக்காய்வாளர் -Tilko Hotel) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசநாயகி, காலஞ்சென்ற சிவசுப்பிரம்ணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனஞ்செயராஜசிங்கம் (லண்டன்), கிரிசானந்தன் (அவுஸ்திரேலியா), திஸ்ஸானந்தன் (அவுஸ்திரேலியா), பாதுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவை நிலையம்- உடுவில்) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், தர்ஜினி, சாரங்கி (அவுஸ்ரேலியா), சுஜந்தன் (அன்ரா கலர் லாப்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சஞ்செய், சஸ்வின், ஷலினா, எஜெய் (அவுஸ்ரேலியா), தஷ்மியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2016) வியாழக்கிழமை 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
பாலாவோடை, மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 068 6643

(5444)


# அமைச்சரவைக்கு எதிரான மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றம் தீர்மானம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் தற்போதைய அமைச்சரவை சட்ட விரோதமானது என்று தீர்ப்பு அளிக்குமாறு கோரி வழக்கறிஞர் அருணி லக்சிறியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் பிரதிவாதிகளாக பிரதமர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையின் அரசியல் சாசனத்தின்படி நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்று ஆட்சியில் இருக்கின்ற போது மட்டுமே 30க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் அடங்கிய அமைச்சரவை ஒன்றை நியமிக்க முடியும் என இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கம் என்பது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் உள்ளடக்கப்பட்ட ஒரு அரசாங்கம் என அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக இந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு கட்சிகளால் அமைக்கப்பட்ட அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் எனக் கூறமுடியாது என குறிப்பிட்டுள்ள மனுதாரர், இந்த அரசாங்கத்துக்கு 30க்கும் மேற்பட்ட அமைச்சர்களை நியமிக்க அதிகாரம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை சட்டவிரோதமானது என தீர்ப்பு அளிக்குமாறு மனுதாரர் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## இந்தியா செல்கிறார் மகிந்த அமரவீர

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பிலான பேச்சுக்களில் பங்கேற்க எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த அவர், இந்திய மீனவர்களை விடுவித்த போதிலும் அவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பில் எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. எனவே இந்திய அரசாங்கத்தின் கோரிக்கையின் பிரகாரமே நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இந்தியாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் பங்கேற்க எதிர்வரும் மாதமளவில் அங்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளேன் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (செ-11)


## Make-up, Facial



மணப்பெண் ஒப்பனை, பேஷியல்

புதிய பிரிவு பயிற்சி வகுப்புக்கள்

30.07.2016 சனி

ஆரம்பமாகின்றது

கலந்து கொள்ள விரும்புவோர் எமது அலுவலகத்தில் பதிவுகளை செய்து கொள்ளலாம்

அலுவலகத் தொடர்பு: 0775259954



தாரிகை நுண்கலை வளாகம்
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி

## சாதனை நாயகியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



நவாலியூரின் சாதனை நாயகியும்
யா/இந்து மகளிர் கல்லூரியின் மாணவியுமாகிய
செல்வி சுதாகரன் நிதர்ஷனா
அவர்கள் பாடசாலைக்கிடையிலான
மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில்
100M, 200M ஓட்டப் போட்டியில்
முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை
பெற்றதோடு மட்டுமன்றி பாடசாலைக்கிடையிலான
தமிழ்த் தினப் போட்டியில் நாட்டிய நடனத்தில்
தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பிடித்த குழுவில்
இடம்பிடித்து சாதனை படைத்த நாயகியை
வாழ்த்துவதோடு மேன்மேலும் சாதனை படைக்க
நவாலி களையோடை கண்ணகை அம்மன்
துணை புரிவாராக.

வாழ்த்துவோர் :
வலம்புரி T.C, நவாலி

(5446)

## தேவை

பாவித்த தச்சுவேலை இயந்திரம் 10 அல்லது 12 அங்குலம் உடன் தேவை

தொடர்புகளுக்கு :-
077 4366 704

## தாதியர் தேவை

பயிற்சி பெற்ற தாதியர் தேவை (ஆய்வுகூட அனுபவம் விரும்பத்தக்கது)

077 8730 129


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு ஒரு மைதானத்தைக்கூட முன்பதிவு செய்ய தெரியவில்லை-ராஜித



மகிந்தவுக்கு ஒரு மைதானத்தைக்கூட முன்பதிவு செய்ய தெரியவில்லை. இவர் நாட்டை எப்படி ஆட்சி செய்திருப்பார் என சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரையின் போது கொழும்பில் பாரிய மாநாடு ஒன்று நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் குறித்த மாநாட்டிற்கு அரசாங்கம் மைதானம் ஒன்றையும் வழங்கப் போவதில்லை என மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இது ஒரு முட்டாள்தனமான கூற்று என ராஜித தெரிவித்தார்.

ஒரு மைதானம் வேண்டும் என்றால் அதற்கு முன்பதிவு செய்வது முக்கியமான ஒன்று. ஆனால் மகிந்த தரப்பிலிருந்து இதுவரை யாரும் தமக்கு ஒரு மைதானம் வேண்டும் என்று எந்தவிதமான முன்பதிவையும் செய்யவில்லை.

இவ்வாறிருக்க எப்படி அவர்களுக்கு மைதானம் வழங்குவது என ராஜித கேள்வி எழுப்பியதோடு, அவர் எப்படி நாட்டை ஆண்டிருப்பார் என சந்தேகம் வெளியிட்டுள்ளார். (இ-7-10)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# மாணவர்களை இலக்கு வைத்து விஷ போதைப்பொருள் விற்பனை

## தடுக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து பாடசாலைகளுக்கு அண்மையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு விஷ போதைப் பொருள் விற்பனையினை தடுப்பதற்கு போதைப்பொருள் தடுப்பிற்கான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

மாணவர்களையும் நாட்டையும் பற்றிச் சிந்திக்காது பணம் உழைக்கும் நபர்களினால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான குற்றச்செயல்களில் இருந்து எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதற்கு கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக ஜனாதிபதி வலியுறுத்தினார்.

காலி கத்தலுவ மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று முற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

## நவீன ஜப்பான் தொழில்நுட்பத்தை இலங்கையில் அறிமுகப்படுத்த இணக்கம்

ஜப்பான் மக்களின் நாளாந்த வாழ்வில் செயற்றிறனை விருத்தி செய்வதற்கு நவீன தொழில்நுட்பத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள My Number எண்ணக்கருவினை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் பாராளுமன்றத்தின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் Fukuda Sensai நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

## ரணிலின் கருத்துக்கு எதிர்க்கட்சி எதிர்ப்பு

ஊடகவியலாளர்களுக்கு எதிரான பிரதமர் ரணிலின் கருத்துக்கு கூட்டு எதிர்க்கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஊடக நிறுவனங்கள். ஊடகவியலாளர்கள் ஆகியோரை இலக்கு வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் வெளியிட்ட கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டுள்ளது. அந்த ஊடக அறிக்கையில்,

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களை இலக்கு வைத்து பிரதமர் ரணில் வெளியிட்ட கருத்துக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பிரதமரின் இந்த நடவடிக்கை பிரஜைகளின் புனிதமான உரிமைகளை மீறும் செயலாகும். செய்தித்தாள் ஒன்றின் ஆசிரியரை பதவி விலகு மாறு பிரதமர் கோரியுள்ள துடன். அவ்வாறு பதவி வில காவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என அச்சுறுத்தியுள்ளார். கடந்த 18 மாத ஆட்சிக் காலத்தில் பல தடவைகள் பிரதமர் ரணில் ஊடகங்களை எச்சரித்துள்ளார்.

நல்லாட்சி கொள்கை பற்றி பிரசாரம் செய்யும் இந்த அரசியல்வாதிகள் பொறுப்புணர்ச்சியற்ற வகையில் இவ்வாறு ஊடகங்களை மிரட்டுவார்கள் என ஊடகவியலாளர்கள் கனவிலும் நினைத்திருக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## மதத்தீவிரவாதத்தை களைந்தெறியுமாறு பிரதமரிடம் கோரிக்கை

மதத் தீவிரவாதத்தை உடனடியாகக் களைந்தெறிவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

மதத் தீவிரவாதத்தை உடனடியாகக் களைந்தெறிவது. நாட்டின் பாதுகாப்புக்கும் ஸ்திரத்தன்மைக்கும் மிகவும் அவசியமானதாகும் என்பதில் நீங்கள் உடன்படுவீர்கள் என்று நம்புகிறேன்.

2013 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து நமது நாட்டில் முன்னொருபோதுமில்லாத வடிவத்தில் முஸ்லிம் மக்களுக்கும், இஸ்லாத்துக்கும் எதிராக மதத் தீவிரவாதமும். வெறுப்புப் பிரசாரமும் முடுக்கிவிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தோடு இந்த தீவிரவாத நடவடிக்கைகள் சற்று ஓய்ந்ததுபோல் தோன்றினாலும் இப்போது மீண்டும் மெதுவாக முளையிட்டு ஓங்கி வளர்ந்து வருவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

முன்னைய அரசின் பிந்திய காலத்தில் துளிர்விட்ட முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட மேற்கூறிய நடவடிக்கைகள் தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்தை முன்வைத்து அரங்கேற்றப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். (இ-7-10)


## சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை
## Ayurvedic Treatment for Renal Diseases

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கடுப்புடன் வெளியேறல். ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சீறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்படும் புரஸ்தகோள (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றும் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## காணாமற் போனோர் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம்!

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பான இறுதி அறிக்கை இன்னும் சில நாட்களில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாக விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த விசாரணைகளை முன்னெடுத்த விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை. குறித்த விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் காணாமற் போனோர் தொடர்பிலான இறுதி அறிக்கை தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளதாகவும். இது மிக விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

## படைச்சிப்பாய் மீது குளவி கொட்டியது


குளவிக் கொட்டுக்கு இலக்கான படைச்சிப்பாய் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி-உடுப்பிட்டி-நவிண்டில் எள்ளங்குளம் படைமுகாமில் கடமையாற்றும் கருணாரட்ன சமந்திலக ராஜபக்ஷ (வயது-39) என்ற படைச்சிப்பாயே இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவராவார். (இ-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுழலில் அவுஸ்திரேலியா தடுமாற்றம்

பல்லேகலேயில் நடக்கும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்சில் 203 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மூன்று டெஸ்ட், இருபது- 20 மற்றும் ஒருநாள் தொடர்களில் விளையாடுவதற்காக இலங்கை வந்துள்ளது. மூன்று போடடிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் பல்லேகலேயில் நடைபெற்று வருகிறது. நாணய சுழற்சியில் இலங்கை அணி கப்டன் மத்யூஸ் பேட்டிங் தேர்வு செய்தார்.அதன்படி முதலில் களமிறங்கிய இலங்கை அணி முதல் இன்னிங்சில் 117 ரன்னில் சுருண்டது. ஹசில்வுட், நேதன் லயன் ஆகியோர் தலா 3 விக்கெட்டும், ஸ்டார்க், ஓ"கீபே ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.



பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா 203 ரன்களில் ஆட்டமிழந்தது. அந்த அணித்தரப்பில் அடம் வோஜஸ் அதிகபட்சமாக 47 ரன்கள் எடுத்தார். கப்டன் ஸ்மித் 30 ரன்கள் எடுத்தார். இலங்கை பந்து வீச்சாளர்களில் ரங்கன ஹேரத் மற்றும் லக்ஷன் சந்தகன் தலா நான்கு விக்கெட்களை வீழ்த்தினார்கள்.

86 ரன்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, ஒரு விக்கெட்டை இழந்து 6 ரன்கள் எடுத்து உள்ளது. மழை காரணமாக நேற்றைய ஆட்டம் முழுமையாக நடைபெறவில்லை. போட்டியின் மூன்றாம் நர்ள் ஆட்டம் இன்றாகும். (க)

## ஐ.சி.சி விருது பட்டியலில் முரளியின் பெயர் இணைப்பு

ஐசிசி வழங்கும் "Hall Of Fame" விருது பெறும் வரிசையில் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் இடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.இலங்கையின் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரனை "Hall Of Fame" -ல் இணைப்பதாக ஐசிசி நேற்று அறிவித்தது.

மேலும் இதில் இங்கிலாந்தை சேர்ந்த லோஹ்மான், அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஆர்த்தர் மோரிஸ் மற்றும் ரோல்டன் (மகளிர் கிரிக்கெட் அணி) ஆகியோரும் இடம்பெற றுள்ளனர.முரளிதரன் ஒரு நாள் போட்டிகளில் 534 விக்கெட்டுகளும், டெஸ்ட் போட்டியில் 800 விக்கெட்களும் வீழ்த்தியுள்ளார்.மேலும் 1996 ம் ஆண்டு இலங்கை அணி உலக கிண்ணத்தை வெல்ல பெரிதும் துணையாக இருந்தவர் முரளிதரன்.




இங்கிலாந்தை சேர்ந்த லோஹ்மான 18 டெஸ்ட் போட்டிகளில் 112 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இவர் 1901ஆம் ஆண்டு 36 வயதில் காசநோயால் அவதிப்பட்டு இறந்தார்.ஆர்த்தர் மோரிஸ் 1940ஆம் ஆண்டுகளில் அசைக்க முடியாத துடுப்பாட்டக்காரராக விளங்கியவர், 46 டெஸ்ட் போட்டிகளில் 12 அரைசதம், 12 சதங்கள் அடித்து, அணிக்கு இரண்டு முறை தலைவராக பதவி வகித்தவர்.

அவுஸ்திரேலியாவின் மகளிர் கிரிககெட்டில் சிறந்த சகலதுறை வீராங்கனையான ரோல்டன் 2005ஆம் ஆண்டு நடைபெற்ற உலக கிண்ண இறுதி போட்டியில் சதம் அடித்து சாதனை படைத்தவர். இவர் 14 டெஸ்ட், 141 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட நால்வ ருக்கும் விரைவில் "Hall Of Fame" தொப்பி பரிசாக அளிக்கப்படும் என ஐசிசி அறிவித்துள்ளது. (க)

## ரியோ ஒலிம்பிக் போட்டி ரோஜர் பெடரர் விலகல்

சுவிட்சர்லாந்து டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் காயம் காரணமாக ரியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். 34 வயதாகும் ரோஜர் பெடரர் கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 17 பட்டம் வென்றவர். 2008ல் தங்கம், 2012ல் வெள்ளி என இரு ஒலிம்பிக் பதக்கம் வென்றார்.



இந்நிலையில் காயம காரணமாக ரியோ ஒலிம்பிக் மற்றும் இந்த ஆண்டு மீதமுள்ள போட்டிகளில் இருந்தும் அவர் விலகியுள்ளார். இது தொடர்பாக அவர் தனது பேஸ்புக் பதிவில் கூறுகையில், நான் இந்த ஆண்டு ஆரம்பத்தில் முழங்காலில் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். இதில்இருந்து முழுமையாக குணமாகவில்லை. தற்போது எனக்கு ஓய்வு தேவை என டாக்டர்கள் அறிவுறுத்தினர். சில ஆண்டுகள் தொடர்ந்து விளையாட வேணடுமெனில் நான் ஓய்வெடுத்தாக வேண்டும். வேறு வழியில்லாத நிலையில் ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகுகிறேன். மேலும், இந்த ஆண்டு மீதமுள்ள போட்டித் தொடர்களிலும் தன்னால் பங்கேற்க முடியாது என தெரிவித்துள்ளார். (க)

## ஐ.சி.சி தரவரிசை அஸ்வின் முதலிடம்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் அசத்திய அஷ்வின் ஐசிசி டெஸ்ட் பந்துவீச்சாளர் தரவரிசைப் பட்டியலில் மீண்டும் முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார்.



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக ஆடிய முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமானார்.

முதல் இன்னிங்சில் துடுப்பாட்டத்தில் 113 ஓட்டங்களை விளாசியது மட்டுமல்லாமல், 2ஆவது இன்னிங்சில் பந்துவீச்சில் 83 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 7 விக்கெட்டுகள் அள்ளினார்.

இதனால் நேற்று வெளியான டெஸ்ட் தரவரிசை பட்டியலில ஏற்கெனவே முதலிடத்தில் இருந்த பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் யசிர் ஷாவை பின்னுக்கு தள்ளி அஷ்வின் (876 புள்ளிகள்) மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். (க)

## இன்றைய போட்டி

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அமரர் நல்லையா சதிஸ்குமாரின் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் இந்து இளைஞன் B விளையாட்டுக் கழகத்தை எதிரத்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

## கம்ரன் அக்மல் ஜொலிப்பு நைட் ரைடர்ஸ் வெற்றி

கரீபியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் லூசியா ஸவுக்ஸ் அணிக்கெதிரான நேற்றைய போட்டியில் கம்ரன் அக்மலின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலமாக நைட் ரைடர்ஸ் அணி சிறந்த வெற்றியினை பெற்றுக் கொண்டுள்ளது.இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லூசியா ஸவுக்ஸ அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. லூசியா ஸவுக்ஸ் அணி சார்பில் அணித்தலைவர் சமி 37 ஓட்டங்களை ஆட்டமிழககாமல் பெற்றுக்கொண்டார்.நைட் ரைடர்ஸ் அணி சார்பில் பிராவோ 2 விக் கெட்டுகளை கைப்பற்றினார்.168 என்றஓட்ட எண்ணிக்கையை வெற்றியிலக்காக கொண டு துடுப்பெடுத்தாடிய நைட் ரைடர்ஸ் அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் இறுதியில் கம்ரன் அக்மலின் அரைச்சதத்தின் மூலம் 4 விக்கெட்டுகள்



வித்தியாசத்தில் வெற்றி பெற் றது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடிய கம்ரன் அக்மல் 7 அறு ஓட்டங்கள் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 73 ஓட்டங்களை பெற்றார்.பந்துவீச்சில் டெல்ரொன் ஜோன்சன் 3 விக்கட்டுகளை கைப்பற்றினார்.போட்டியின் ஆட்டநாயகனாக கம்ரன் அக்மல் தெரிவு செய்யப்பட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதயாத்திரையில் பங்கேற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## மகிந்த அமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாதயாத்திரையை நடத்த தீர்மானிக்கவில்லை. எனவே, கட்சிக்கு எதிராக செயற் படுவோருக்கு எதிராக மத்திய குழு கூடி தீர்மானங்களை எடுக்கும் என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் பொதுச்செயலாளருமான மகிந்த அமரவீர எச்சரித்துள்ளார்.**

கட்சியை பிளவுபடுத்த முயற்சிப்பவர்களுக்கு எதிராக தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



இது தொடர்பாக மகிந்த அமரவீர மேலும் தெரிவிக்கையில்,

அரசுக்கு எதிராக கண்டியிலிருந்து கொழும்புக்கு பாதயாத்திரையொன்றை நடத்துவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்த விதமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை. அதற்கான அவசியமும் இல்லை. ஆனால் சிலர் கட்சியை பிளவுபடுத்த முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து கொண்டு கட்சியை பிளவுபடுத்த எவருக்கும் இடமளிக்க முடியாது. அவ்வாறு எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும். உண்மையான சுதந்திரக் கட்சியினர் எவரும் பாதயாத்திரை எதனையும் ஏற்பாடு செய்யவில்லை.

எனவே. எதிர்காலத்தில் கட்சிக்கு எதிராக செயற்படுபவர்கள் தொடர்பில் கட்சியின் மத்தியகுழு கூடி தீர்மானங்களை எடுக்கும். கட்சியை பலப்படுத்தி அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதே எமது நோக்கமாகும். அதற்காக கட்சியை ஒற்றுமைப்படுத்தும் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதற்கு எதிராக யாராவது செயற்பட்டால் தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

### அம்பாந்தோட்டையில் பொருளாதார வலயம் அமைக்க

## 15 ஆயிரம் ஏக்கர் காணியை இலங்கையிடம் கோரிய சீனா

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில். சிறப்புப் பொருளாதார வலயத்தை அமைப்பதற்கு 15 ஆயிரம் ஏக்கர் காணியைத் தருமாறு சீனா கோரியுள்ளதாக சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர். இலங்கையில் இந்தியாவும். சீனாவும் சிறப்பு பொருளாதார வலயங்களை அமைக்கவுள்ளன.

இந்தியா தமது பொருளாதார வலயத்தில் மருந்துப் பொருட்கள் மற்றும் வாகன உதிரிப்பாக தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளது.

அதேவேளை. சீனா அம்பாந்தோட்டையில் பொருளாதார வலயத்தை அமைப்பதற்கு 15 ஆயிரம் ஏக்கர் (55 சதுர கி.மீ. ) காணிகளைத் தருமாறு கேட்டிருக்கிறது.

காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்திருக்கிறோம். இந்த பொருளாதார வலயத்தின் மூலம் பத்து இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்க முடியும்.

இந்தியா அமைக்கவுள்ள பொருளாதார வலயம் எங்கு அமையும் என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு தொடர்பாக பேச்சு நடத்த அடுத்த வாரம் இந்திய அதிகாரிகள் குழு வரவுள்ளது.

அதற்குப் பின்னர். சுதந்திர வர்த்தக உடன்பாடு குறித்துப் பேச சீன அதிகாரிகள் வரவுள்ளனர்.

சீன- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்பாடு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் கையெழுத்திடப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)


**NORTH LANKA IIT**

தமிழ் மொழி மூலமான முதுகல்விமாணி M.Ed கற்கைநெறி 2016-2017 விண்ணப்பம்

M.Ed Tamil Medium Programme 2016 - 2017

*கல்வியமைச்சின் அனுமதி
*பல்கலைகழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி
*வடமாகாணக் கல்வியமைச்சின் அனுமதி

மேற்படி பாடநெறி எமது நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளது. தகமை B.Ed or P.G.D in Edu பூர்த்தி செய்த அரச தனியார் பாடசாலை ஆசிரியர்கள், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் விண்ணப்படிவத்தை சுயமாகத் தயாரித்து 07.08.2016 திகதிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

விலாசம்
North Lanka IIT, Top Floor,
People's Bank Building,
Stanley Road, Jaffna.

தெரிவுமுறை: நேர்முகத்தேர்வு (சேவைமுப்பு அனுபவம் கஷ்டப்பிரதேச சேவைக்கு முன்னுரிமை)
நேர்முகத்தேர்வுக்கான திகதி 07.08.2016 அன்று சமூகமளிக்கவும்.
தமிழ் மொழி மூல பரிட்சார்த்திகளின் நலன் கருதி விரைவில்

கிழக்கு மாகாணம் - மட்டக்களப்பு , தென் மாகாணம் - மாத்தறை
மேல் மாகாணம் - கொழும்பிலும் முதுகல்விமாணிப்பாடநெறி ஆரம்பமாகவுள்ளது.

தொடர்புகளுக்கு
Dr.B.Thanabalan Ph.D
Dean of the Faculty of Education
North Lanka IIT
T.P: 0770681958

குறிப்பு : நேர்முக பரீட்சையில் தேர்வாகும் முதல் 30 மாணவர்களுக்கு மட்டும் சலுகை கட்டணம் வழங்கப்படும்.

(சி-5308)


## இராசி பலன்

28.07.2016
(ஆடி 13, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
நவமி பிற்பகல் 1.28 மணிவரை
பரணி முற்பகல் 9.10 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
கார்த்திகை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை<br>பிற்பகல் 2.44இற்கு<br>இடப-சந் | | சூரி<br>சுக் |
| | | | குரு<br>ராகு<br>புத |
| | சனி<br>செவ் | | |

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனையுண்டு.

**இடபம்:** பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**கடகம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர், நண்பர்களின் ஒத்தாசைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தடைப்பட்ட காரியங்களில் மாலை நேரம் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பண விரயங்கள் கூடும்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உடன் பிறப்புக்கள் உதவிசெய்ய முன்வருவர், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**தனுசு:** வியாபார விரோதம் விலகும், கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல்நலன் சீராகும்.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலை.ஊழியர்கள் தொடர் போராட்டம்






(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை பல்கலைக்கழக முன்றலில் ஒன்று கூடி பல்வேறு கோசங்களை எழுப்பினர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்வி சாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கக் கோரியும் சம்பள ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சம்பள உயர்வுகளை நடைமுறைப்படுத்தக் கோரியும் இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக முன்றலில் கூடிய கல்வி சாரா ஊழியர்கள் தமது கோரிக்கைகள் மீது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லாவிடின் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் சி.தங்கராசா கருத்துத் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் இன்று முதல் தொடர்ச்சியான தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடடுள்ளதாகவும் இப் போராட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் இணைந்து கொண்டுள்ளனர் எனவும் இந்த வருடம் உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டுக் குழுவுக்கும் இடையில் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கையை அமுல்படுத்தத் தவறியதைக் கண்டித்தும் 25 வீத சம்பள உயர்வை வழங்கும் படியும் இத்தொழிற் சங்கப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ந்து கடந்த 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தோம்.

ஆனால் தீர்க்கமான முடிவு இதுவரை கிடைக்காத காரணத்தினால் இன்றிலிருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளோம்.

இதற்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும்.

இதன் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-9)




## தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அனைத்துலக மருத்துவ அமைப்பினதும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினதும் நிதிப் பங்களிப்பில் அதி நவீன உயர்தர சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிற்றுண்டிச்சாலை நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரும் நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவருமாகிய வைத்தியர் க.இளங்கோ ஞானியர் தலைமையில் நடைபெறும்.

மேற்படி விழாவில், அமெரிக்க அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் உப தலைவர் வைத்திய கலாநிதி திருமதி ராஜம் தெய்வேந்திரம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் க.நந்தகுமாரன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை முன்னாள் வைத்திய அத்தியட்சகரும் நோயாளர் நலன்புரிச் சங்க ஆலோசகருமாகிய வைத்தியர் மு.உமாசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை துர்க்கா துரந்தரர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும், வரவேற்புரையை தாதிய பரிபாலகர் சோ.இராசேந்திரனும், நன்றியுரையை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் லயன் சி.ஹரிகரனும் வழங்குவர். கட்டட ஒப்பந்தகாரர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது. (இ-5)

## யாழ்.செயலகத்தில் செயலமர்வு



கைத்தொழில் அபிவிருத்தி சபையின் செயலமர்வு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்கள்,கைத்தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-5)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது. இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற அணிகள் தங்கள் விண்ணப்பங்களை க .ஜெயதர்ஷன் 077 460 4349, 078 532 6257 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்புகொண்டு வழங்க முடியும் எனவும் விண்ணப்ப முடிவுத் திகதி 30.07.2016 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த வைத்தியருக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பணிப்புறக்கணிப்பை மேற்கொண்ட கால்நடை வைத்தியர் ஒருவருக்கு எதிராக விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக வடமாகாண கால்நடை மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரன் தெரிவித்துள்ளார்.

மந்திகை கால்நடை வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் திடீரென பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தன்னால் எந்தச் சேவையும் வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதனால் தமது வளர்ப்பு பிராணிகளுக்கு சிகிச்சை மேற்கொள்ளச் சென்ற பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டதாகவும் வேறு இடங்களுக்குச் சென்று சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

சிலர் இது தொடர்பாக பணிப்பாளருக்கு முறையிட்டதை அடுத்து மேலதிக வைத்தியரை குறித்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இச் சம்பவம் குறித்து பணிப்பாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அன்றைய தினம் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பொது மக்களிடம் எழுத்து மூலமான முறைப்பாட்டை கோரியுள்ளோம்.

அது கிடைக்கப் பெறும் பட்சத்தில் உரிய விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.. (இ-9)





கொமர்ஷல் வங்கியின் திருநெல்வேலி கிளையின் அருணலு பரிசளிப்பு நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி வங்கிக் கிளையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது கடந்த வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்று மேற்படி வங்கிக் கிளையில் அருணலு சிறுவர் சேமிப்பு கணக்கைப் பேணும் மாணவர்களது சேமிப்புக் கணக்கில் முறையே 10 ஆயிரம் ரூபா, 7 ஆயிரத்து 500 ரூபா, 5 ஆயிரம் ரூபா வீதம் பணம் வைப்பில் இடப்பட்டதுடன் சான்றிதழ்களும் பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'அங்கவீனமடைந்த எவரையும் கட்டாயப்படுத்தி விலக்கவில்லை'

அங்கவீனமடைந்த எந்தவொரு இராணுவ வீரரையும் ஓய்வு பெறுமாறு சொல்லவில்லை. தொடர்ந்தும் சேவையில் ஈடுபட முடியாத நிலையில் உள்ள அங்கவீனமடைந்த வீரர்கள் தங்களது சுயவிருப்பத்தின் பேரிலேயே விலகிச்சென்றனர். அவர்கள் விலகிச்செல்லும் போது கடிதம் கொடுத்துவிட்டே சென்றனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், அங்கவீனமடைந்த வீரர்கள் முப்படைகளிலும் தற்போதும் சேவையில் உள்ளனர். அவர்கள் விரும்பும் வரை சேவையில் இருக்கமுடியும் எனவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற, அங்கவீனமடைந்த இராணுவ வீரர்களின் ஓய்வூதியம் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் பாதுகாப்பு அமைச்சின் சார்பில் கலந்துகொண்டு இராணுவ அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பிரிகேடியர் சனத் பெரேரா கருத்து தெரிவிக்கையில், இராணுவத்தில் 10 வருடங்கள் சேவையாற்றிய அதிகாரிகள் மற்றும் 12 வருடங்கள் கடமையாற்றிய சாதாரண வீரர்களுக்கு 55 வயதுக்குப் பின்னர் ஓய்வூதியம் வழங்கப்படும். இது சகல அரச ஊழியர்களுக்கும் வழங்கப்படும் முறைகளுக்கு அமைவானது.

இராணுவ சேவையில் அங்கவீனமடைந்து, ஓய்வு பெற்று சென்ற பலர் 10, 12 வருடங்களுக்கு குறைவான காலம் சேவையில் ஈடுபட்ட நிலையே காணப்படுகின்றது. இதன் காரணமாக அவர்களுக்கு 55 வயதுக்குப் பின்னர் ஓய்வூதியம் வழங்குவதில் நடைமுறையில் உள்ள ஓய்வூதியச் சட்டத்தில் இடமில்லை.

பாதிக்கப்பட்ட வீரர்கள் சேவையில் இல்லாவிட்டாலும் சகலருக்கும் அடிப்படையாக மாதாந்தம் 55ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. அது தவிர அங்கவீனமடைந்தவர்களுக்கான கொடுப்பனவுத் தொகையான 9 ஆயிரம் வழங்கப்படுகின்றது. இவை 55 வயதுவரை வழங்கப்படும். அதன்பின்னர் தான் அவர்களுக்கு இக்கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்கப்படும். அதில் 12 வருட சேவைக்காலத்தை நிறைவு செய்யாதவர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலேயே நடைமுறைச் சிக்கல் காணப்படுகின்றது" என்றார். (இ-7-10)

**ஏல விற்பனை**

இடம் :- பாடசாலை அலுவலக முன்புறம்
காலம்:-இன்று(28.07.2016) முற்பகல் 10 மணி

ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்கள்

பாலர் கதிரை-44, இணை வாங்கு-45,
பஞ்சர் பெரியது-01, பஞ்சர் சிறியது-01, U.P.S-04

யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை

(சி/5305) அதிபர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியர்களாகக் கடமையாற்றி
இலங்கை அதிபர் சேவை தரம்III இற்கு
பதவியுயர்வு பெற்றுள்ள



திரு. சிவப்பிரகாசம் சிவநாவலன் Sp.Tr(Sc),BEd(R)
திரு. மருதையினார் தர்மசீலன் B.A,Dip.in.Teach,PGDE(Dic),M.A
திருமதி தர்மினி அம்பிகைபாகன் B.A,(Hons),PGDE,MEd

ஆகியோர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறப்புடன்
வாழ வாழ்த்துகின்றோம்.

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய
மகா வித்தியாலயம்,
மட்டுவில், சாவகச்சேரி.

(5437)

வாழ்த்துவோர்,
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இணுவில் இந்துக்கல்லூரி மாணவி செல்வி. அ. சாகித்தியாகருமாரி அவர்கள்
தமிழ்த்தினப் போட்டி-2016 தனி நடனம் (அபிநயம்) நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில்
முதலாம் இடத்தைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



படத்தில் உள்ளோர்:-
1.செல்வி.அ.சாகித்தியா கருமாரி
2.பயிற்றுவித்த ஆசிரியர்
திருமதி.த.மனோகரன்
3. மாணவியின் பெற்றோர்.

(5436)

பாராட்டுவோர்:-இணுவில் இந்துக்கல்வி அபிவிருத்தி நம்பிக்கை
நிதியமும் கல்லூரிச் சமூகமும்.

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-22

(27.07.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 11) 3 | 21) 3 | 31) 1 |
| 02) 3 | 12) 2 | 22) 3 | 32) 3 |
| 03) 1 | 13) 2 | 23) 3 | 33) 2 |
| 04) 2 | 14) 1 | 24) 3 | 34) 3 |
| 05) 1 | 15) 3 | 25) 1 | 35) 2 |
| 06) 1 | 16) 3 | 26) 3 | 36) 3 |
| 07) 1 | 17) 2 | 27) 2 | 37) 2 |
| 08) 1 | 18) 2 | 28) 1 | 38) 2 |
| 09) 2 | 19) 3 | 29) □◎□ | 39) 2 |
| 10) 3 | 20) 2 | 30) 10 1/2 வருடங்கள் | 40) 1 |

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம் புனர்பூசம்<br>கி.பா:50சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/லண்டன் PR<br>தொ.இ: B/6150 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc/<br>தனியார் தொழில்<br>தொ.இ: G/6172 |
| பிறப்பு: 1984 RC<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 65செவ் 1 இல்<br>உயரம்: 172 CM<br>தகைமை/தொழில்:BCS/<br>அரசதொழில்<br>தொ.இ: B/6151 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 44 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6176 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BFஅரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6152 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 32 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/6178 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமைதொழில்:<br>உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/6154 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 44 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc, MSc/கண்வைத்தியர் கனடா எதிர்பார்ப்பு:<br>வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/61,81 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு—நாயாறு பிரதேசத்தில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி ஆதிக்கம்

## நல்லிணக்க பொறிமுறைக்கான செயலணியிடம் மீனவர் குற்றச்சாட்டு



(பனிக்கன்குளம்)

காணாமற்போனோர் பணியகம் மற்றும் உள்ளக நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைகள் உட்பட ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான மக்களின் கருத்துக்களை அறியும் செயலணியானது போரினால்பேரழிவைச் சந்தித்த முல்லைத்தீவு மக்களின் கருத்துக்களை கேட்டறிந்தது .

சட்டத்தரணி மனோரி முத்தெட்டு வேகம தலைமையிலான 11 பேர் அடங்கிய குழுவினர் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட மக்களிடம் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில்,முல்லைத்தீவு மாவட்டத்திற்கான மக்களின் கருத்தறியும் குழுவினரால் நேரடியாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடம் கருத்தறியும் நடவடிக்கைகளை இந்த குழுவினர் முன்னெடுத்தனர்.

இந்தகுழுவிடம் கருத்துக்களை தெரிவிப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பல புத்திஜீவிகள் வருகை தந்து தமது கருத்துக்களை பதிவு செய்தனர்.காணிப்பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகள், இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடுகள் மற்றும் இறுதி யுத்தத்தில் தவறிழைத்தோருக்கான தண்டனைகளை வழங்கல், மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பாக மக்களால் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது தேவைகள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் கூட்டங்களில் கடற்படையினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பங்குபற்ற வேண்டிய தேவை இல்லை என குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஆயுத பலத்துடன் செயற்படுபவர்கள் சிவில் சமூகத்தின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

முல்லைத்தீவு - நாயாறு பிரதேசத்தில் அதிகமான தென்னிலங்கை மீனவர்கள் தமது பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாக குறித்த குழுவினரிடம் மீனவர் ஒருவர் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்தார்.

நாயாறு பிரதேசத்தில் அமைந்துள்ள கடற்படை முகாம்களை பிரித்து தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு கடற்படையினர் அனுமதி வழங்குவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (2-281)




## இரணைமடுக்குள வேலைத்திட்ட அபிவிருத்தி குறித்து விளக்கப்படங்களுடன் கலந்துரையாடல்

இரணைமடுக்குள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், இரணைமடு அணைக்கட்டு வேலைத் திட்டம் ஆகியவற்றின் வேலை முன்னேற்றங்கள் தொடர்பான கலந் துரையாடல் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தார். இக் கலந்துரையாடலில் இரணைமடுக்குள கீழ் கட்டமைப்பு அபிவிருத்திகளான பாலவேலைகள், வடி காலமைப்பு மற்றும் இரணைமடு அணைக்கட்டு வேலைத்திட்டம் ஆகியவற்றின் வேலை வேகமான முறையில் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றது.


தற்போது ஏற்பட்ட சில கால நிலை மாற்றங்களால் வேலையில் சிறிய தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் வேகமான முறையிலே வேலைத்திட்டங்கள் நடைபெறும் எனவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வேலைகள் முடிவு பெற்றதும்இரணைமடுக்குள அணைக்கட்டின் தோற்றங்கள் மற்றும் கீழ் கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பாக விளக்கப்படங்களுடன் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சி . சிறிதரன் , கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)



## உடையார்கட்டு வனப்பகுதியில் முறையற்ற விதத்தில் ஆயிரக்கணக்கான தடிகள் கொண்டு செல்லப்படுகின்றன





வனப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கில் முறையற்ற விதத்தில் தடிகள் கொண்டு செல்லப்படுகின்றன என விசுவமடு மக்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

பொதுமக்களின் முறைப்பாட்டையடுத்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் குறித்த பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டார்.

இது தொடர்பில் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உடையார்கட்டு வனப்பகுதியில் பாவாடைக்கல்லு என்ற இடத்திலிருந்து உழவூர்திகள் மூலம் அடிக்கடி, ஆயிரக்கணக்கான தடிகளை ஏற்றிச் செல்கின்றார்கள் என பல தடவைகள் மக்கள் தெரியப்படுத்தினார்கள். அத்தோடு நேரில் சென்று பார்வையிடுவதன்மூலம் உறுதிப்படுத்துவோம் என்றும் தெரியப்படுத்தினார்கள்.

வனப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கில் முறையற்ற விதத்தில் தடிகள் கொண்டு செல்லப்படுகின்றன என விசுவமடு மக்கள் ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று கடந்த 24 ஆம் திகதி விசுவமடு இளங்கோபுரம் பகுதிக்குச் சென்ற போது, அங்கு என்னைச் சந்தித்த மக்கள், வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு பல சலுகைகளை வன இலாகா பிரிவினர் செய்து கொடுக்கின்றார்கள், வனப் பகுதி சூறையாடப்பட்டு பல்லாயிரக்கணக்கான நீளமான தடிகளை காட்டில் வெட்டி ஏற்றிச் செல் கின்றனர் என்று தெரிவித்தனர்.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக குறித்த இடத்திற்கு சென்ற போது வனஇலாகா பகுதியினர் யாரையும் காணமுடியவில்லை. ஆனால் இரண்டு இடங்களில் ஆயிரக்கணக்கில் தடிகள் வெட்டி ஏற்றப்படுவதற்கு தயார் நிலையிலிருந்ததை நேரில் பார்வையிட்டேன். அதன் பின் திரும்பி வந்த போது வன இலாகா உத்தியோகத்தர் ஒருவரை காட்டிலேயே காண முடிந்தது.

அவரிடம் அனுமதிப்பத்திரங்கள் மூலமாகவா தடிகள் கொண்டு செல்லப்படுகின்றன எவ்வளவு தடிகளுக்கு அனுமதி உள்ளது என வினவியபோது அவரது பதில்கள் தடுமாற்றத்துடன் இருந்தன. நாட்டின் காடழிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். வனம் பாதுகாக்கப்பட வேண்டியது என்று அவரிடம் கூறி விட்டு இது தொடர்பிலான தனது தொடர்ச்சியான கவனம் இருக்கும் என மக்களிடமும் தெரிவித்தேன் என்று தெரிவித்தார். (2-281)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(மல்லாவி)

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரிவினால் துணுக்காய் கல்விவலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான " குடும்பங்களைத் தேடி மீளிணைத்தல்" தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2மணி வரை ஏ-9 வீதி மாங்குளத்தில் உள்ள மாவட்ட நன்னடத்தை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென நன்னடத்தை சி றுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் முல்லைத் தீவு மாவட்ட நிலையப் பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் சி.புவனேந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,மேற்படி விழிப்புணர்வு கருத்தரங்கானது எமது திணைக்களத்திற்குட்பட்ட குடும்பங்களைத் தேடி மீளிணைக்கும் பிரிவினால் நடத்தப்படவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 30 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## ஜெயந்திநகர் பிரதான வீதியை புனரமைத்து போக்குவரத்தை இலகுபடுத்துங்கள்

(ஜெயந்திநகர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஜெயந்தி நகர் பிரதான வீதி பயன்பாட்டிற்கு உதவாத நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், சாரதிகள் ஆகியோர் கவலை தெரிவிக்கின்றனர்.


இப்பிரதான வீதியானது திருநகர் பிரதான வீதியின் முடிவிலிருந்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி பாடசாலையின் வீதியினை இணைக்கும் பாதையாக அமைகின்றது.

இவ் வீதியானது மீள்குடியேற்றத்தின் பின்னர் இன்றுவரை செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதாகவும் இவ்வீதியின் ஊடாக ஜெயந்தி நகர் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அலுவலர் அலுவலகம், சந்தை, ஆரம்ப சுகாதார நிலையம், சனசமூக நிலையம், பாடசாலை, முன்பள்ளி என்பவற்றுக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வீதியின் ஊடாக பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என நாளாந்தம் 400 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்கின்றனர் எனவும் மழைக்காலம் நெருங்குவதால் பாடசாலை மாணவர்கள் , கர்ப்பவதிகள், பெண்கள், முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோர் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுவதால்இதனை கவனத்தில்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டது



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கைவேலி உட்பட்ட கிராமங்களில் இன்று வரையிலும் வெடிபொருட்கள் அகற்றப்படாமல் இருப்பதாகவும் அவற்றை அகற்றித் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் நேற்று முன்தினமும் அப்பகுதியில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டமையானது பொதுமக்களை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது.

இதனால் தமது பிள்ளைகளின் உயிருக்கு பாரிய ஆபத்து எழுந்துள்ளதாகவும் குறித்த பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இறுதி யுத்தம் காரணமாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து அனைவரும் இடம்பெயர்ந்து வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த முள்வேலி அகதி முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி 684 குடும்பங்கள் கைவேலி கிராமத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு கடந்த ஐந்து ஆண்டுகள் பூர்த்தியடைகின்ற நிலையிலும் காணிகள் மற்றும் வீதிகளைதுப்புரவுசெய்யும்போது வெடிக்காத நிலையிலுள்ள வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்படுவதாக கைவேலி மக்கள் தெரிவிக்கின்றனர்

எவ்வாறாயினும் குறித்த பிரதேசம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசமாக இராணுவத்தினரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மக்கள் அங்கு மீள்குடியேற்றப்பட்டனர்.

தற்போது அங்கு இன்னமும் வெடிக்காத நிலையில் வெடிபொருட்கள் மீட்கப்படும் சம்பவங்கள் பிரதேச மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(2-281)

# “நல்லிணக்கப் பொறிமுறை” தொடர்பான கலந்துரையாடல்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நாளை மறுதினம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட தகவலின்படி நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான கலந்துரையாடல்நாளை மறுதினம்சனிக்கிழமைகாலை 9 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில்நடைபெறுமென ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் யதுகுலசிங்கம் அனிறுத்தனன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

காணாமல் போனோர் தொடர்பாக அரசாங்கத்திடம் பதிவுகளை மேற்கொண்டவர்களிடம் இருந்து இவ்விடயம் தொடர்பாக அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வுகள், கருத்துக்கள் என்பவற்றை அறிந்து கொள்ளும் முகமாகவும் நாட்டின் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைக் களைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதனூடாக தீர்வொன்றை எட்டுவதற்கு பொது மக்களிடம் இருந்து கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காகவும்நல்லிணக்கபொறிமுறை தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 27 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் அனைவரும் பங்கேற்று தமது கருத்துக்கள் , தீர்வுத் திட்டங்கள் ஆகியவற்றை முன்வைக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# திணைக்களங்களுக்கு இடையில் சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி

(குருமன்காடு)

வவுனியா பொது வைத்தியசாலையின் ஏற்பாட்டில் திணைக்களங்களுக்கிடையிலான சிநேகபூர்வ துடுப்பாட்டப்போட்டியொன்று இடம் பெறவுள்ளது.

திணைக்களங்களுக்கிடையிலான நட்புறவை மேம்படுத்தும் நோக்கோடு வவுனியா பொது வைத்தியசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் கு. அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப் போட்டியில் பங்கேற்க விரும்பும் திணைக்களங்கள் வைத்திசாலையின் பணிப்பாளரை தொடர்புகொண்டு விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளமுடியும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# பாலகன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு; பெற்றோரை நீதிமன்றிற்கு வருமாறு உத்தரவு

(புதுமுறிப்பு)

சாலோம் நகரில் பாதுகாப்பற்ற கிணறு ஒன்றில் இருந்து இரண்டு வயது பாலகன் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பெற்றோரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பிரசன்னமாகுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் பி.கனிஸ்ரன் என்ற பாலகன் நேற்று முன்தினம் மேற்படி கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதன்பின்னர் மேற்படி வைத்தியசாலையில் சடலம் கொண்டு செல்லப்பட்டு அன்றைய தினம் மாலை 6.30 மணி யளவில் பெற்றோரிடம் ஒப்ப டைக்கப்பட்டது.குறித்த சடலம் புதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-307)

# பாடசாலை செல்லாத 12 மாணவர்கள் சிவநகர், ஊற்றுப்புலத்தில் சிக்கினர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பாடசாலைகளுக்கு செல்லாத மாணவர் களை மீண்டும் கல்வி செயற்பாட்டில் இணைக்கும் நோக்குடன் கிளிநொச்சி நீதிமன்றில் ஆலோசனை வழிகாட்டலுக்கமைய சிறுவர் நன்னடத்தை திணைக்களம் கிளிநொச்சி மாவட்ட செயலகம் பொலிஸார் ஆகியோர் இணைந்து நடத்திய மாணவர்களைக் கண்டறியும் நடவடிக்கையில் 12 மாணவர்கள் அடையாளம்காணப்பட் டனர்.

இந்நடவடிக்கையானது நேற்றுமுன்தினம் காலை 9 மணி தொடக்கம் தொடர்ந்து 5 மணித்தியாலயங்கள் வரை இடம்பெற்றது.

இந்த தேடுதல் நடவடிக்கையின் போது ஊற்றுப் புலம், சிவநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லாத மாணவர்கள் 12 பேர் சிக்கினர்.

அன்றைய தினம் இம் மாணவர்கள் நீதிமன்றில் பெற்றோருடன் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதில் ஒருமாணவன் யாழ்ப்பாணம் அச்சுவேலியில் அமைந்துள்ள சீர்திருத்தப் பள்ளிக்கும் ஒரு மாணவி பாதுகாப்பு இல்லத்திற்கும் ஆறு மாணவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிறுவர் இல்லங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஏனைய மாணவர்களை கிளிநொச்சி நீதிமன்றம் எச்சரிக்கை செய்து பெற்றோருடன் மீள இணைத்தது.

இவர்கள்தொடர்பில்தொடர்ந்தும் கண்காணிப்பில் ஈடுபடுமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

ஏற்கனவே இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சாந்தபுரம், பொன்னகர், சிவபுரம், பூநகரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 80 மாணவர்கள் கல்வி செயற்பாட்டிற்காக அண்மையில்மீளிணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# மு/அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் தமக்கு சிறந்த சேவையாற்றிவரும் தற்போதைய உதவிப்பிரதேச செயலாளரை மாற்றி புதிதாக இடமாற்றம் பெற்றுவரும் பிரதேச செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்திலீடுபட வருகை தந்த பொதுமக்கள் முல்லைத்தீவு மாவ ட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் வழங்கிய உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு திரும்பி சென்றனர் .

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் தமக்கு சிறந்த சேவையாற்றிவரும் உதவிப்பிரதேச செயலாளரான இ.ரமேஸ். தமது பகுதிக்கு நியமிக்கப்பட்டு குறுகிய காலத்தில் தமக்கு பல அபிவிருத்திகளை திறம்பட செய்து வருவதாகவும் சட்ட விரோத செயற்பாடுகளான கசிப்பு.மரக்கடத்தல்.மண்ணகழ்வு உள்ளிட்ட பல பிரச்சினைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.இவரை மாற்றம் செய்து இடமாற்றம் பெற்றுவரும் பிரதேச செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு இடமளிக்கமாட்டோம் என எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்திலீடுபட வருகை தந்த மக்கள் முன்னதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடியபோது அவர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு திரும்பி சென்றனர் .

இதுதொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரை வினவியபோது மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாகவும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஒருவரை நியமிக்கபோவதில்லை எனவும் இது தொடர்பாக உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று மக்களுக்கு சாதகமான பதிலொன்று அமையும் என்றும் அவர் தெரிவித்தார். (2-281)



வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்க (ரெலொ) உறுப்பினர்கள் உட்பட 53 அரசியல் கைதிகள் மற்றும் பொது மக்களின் 33 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வான "தமிழ் தேசிய வீரர்கள் தினம்" நேற்றைய தினம் காலை மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மாவட்ட தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தளபதி குட்டிமணி,தலைவர் தங்கத்துரை,முன்னணிப் போராளி ஜெகன் மற்றும் போராளிகள்,பொது மக்கள் உட்பட 53 பேருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

(படங்கள்:போ.சோபிகா,உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் வினையாற்றலுடன் செயற்படத் தடையாகவுள்ள காரணிகள்'



தர்மலிங்கம் ஸ்ரீகரன்
ஆசிரியர்,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

கல்விச் செயற்பாடுகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் முன்னெடுப்பதில் ஆசிரியர் வளம் என்பது இன்றிமையாத முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. பாடசாலைகளில் ஆசிரியர் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் செயற்படும் போதே மாணவரின் கற்கும் ஆர்வத்தை அபரிமிதமாகத் தூண்டமுடிவதுடன் வினையாற்றல் மிக்க செயற்பாடுகளால் மாணவரின் கல்வி வளர்ச்சியை முன்கொண்டு செல்லவும் இயலும்.

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளை அதிகமாகக் கொண்ட கல்வி வலயங்களிற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகள், அழுத்தங்கள் மற்றும் இடர்பாடுகளை எதிர்நோக்கியே வருகின்றனர்.

இவ்வாறு ஆசிரியர் மீது ஏற்படுத்தப்படுகின்ற அழுத்தங்களும் அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களும் மாணவர்களின் அடைவு மட்ட அதிகரிப்பைச் சாத்தியமாக்க முடியாமல் போகலாம்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள கஷ்ட, அதிகஷ்டப் பாடசாலைகள் மற்றும் கடல் கடந்த தீவகப் பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது.

வசிப்பிடங்களிலிருந்து அதிக தொலைவிலுள்ள கஷ்ட, அதிகஷ்ட பிரதேசப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற முக்கிய இடர்பாடாக போக்குவரத்தினால் ஏற்படும் அசௌகரியங்கள் அமைகின்றன. மிக நீண்ட தூரத்தில் காணப்படுகின்ற கஷ்ட,, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளிற்கு நாளாந்தம் பயணம் செய்து பணியாற்றுவதில் பல்வேறு சிரமங்களை ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர். நாளாந்தம் பயணித்து தூரப்பிரதேசங்களிலுள்ள கஷ்ட, அதிகஷ்ட பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றிவிட்டு மீண்டும் இரவு வீடு திரும்புகின்ற மிகவும் கடினமான நிலைமைகளை ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர். நாளாந்த நீண்ட தூரம் பயணங்களைத் தவிர்ப்பதற்காக பல ஆசிரியர்கள் வாரத்தில் ஐந்து நாட்களும் குடும்பங்களைப் பிரிந்து பாடசாலைகளிலே தங்கி கடமை புரிகின்றனர்.

வன்னிப்பிரதேச கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகள் அமைந்துள்ள குக்கிராமங்களுக்கூடான நீண்ட பயணத்தினால் ஏற்படுகின்ற உடற்களைப்பு, சோர்வு என்பன சீரான கல்வியை மாணவர்களிற்கு வழங்குவதில் இடர்பாடுகளை ஏற்படுத்துகின்றது.

மாரிகாலங்களில் வன்னிப்பிரதேச பாடசாலைகளுக்கான பயணத்தில் மிக மோசமான இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். போக்குவரத்துப்பாதைகள் சேறும் சகதியுமாக இருப்பதும் பெருமளவிற்கு கஷ்ட, அதிகஷ்ட பிரதேசப் பாடசாலைகளை அதிகமாகக் கொண்ட மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பிரதேச பாடசாலைகளிற்குச் செல்லும் வீதிகள் மழையினால் அரிப்படைவதும் பாதைகள் வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதும் பாதைகளை ஆறுகள் குறுக்கிட்டு முற்றாகத் தடை செய்வதும் போக்குவரத்தில் பெருமளவு இடையூறுகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறான நிலைமைகள் மாணவர்களிற்கு சீரான கல்வியை வழங்குவதில் பெரும் இடர்பாடுகளை ஏற்படுத்துவதோடு மாணவர்களதும் ஆசிரியர்களதும் வரவிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

கஷ்ட, அதிகஷ்ட பிரதேசப் பாடசாலைகளில் தூய்மையான குடிநீர் வசதிகளோ சுகாதாரமான கழிப்பறை வசதிகளோ போதிய அளவு காணப்படுவதில்லை.

உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக பாரிய குறைபாடுகள் இருந்து கொண்டே வருகின்றது. உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாத பாடசாலைகளில் நெருக்கடிமிக்க வகுப்பறைகளில் தொடர்ச்சியான ஆசிரியப் பணி என்பது மிகவும் சிக்கலுக்குரிய ஒன்றாகவும் கற்பித்தல் பணிகள் பூரணமாக இடம் பெறுவதற்கு பின்னடைவுகளை ஏற்படுத்துகின்ற காரணியாகவும் அமைகின்றது.

தூரப்பிரதேச கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு போதிய ஆரோக்கியமான உணவுகள் கிடைப்பதில்லை. தரமான தேநீர்ச்சாலைகளோ அங்கு அரிது. உணவு உண்பதில் ஏற்படும் ஒழுங்கீனம் உடற்சோர்விற்கும் பல்வேறு உடல் உபாதைகளிற்கும் காரணமாகின்றது. ஒழுங்கான உணவின்மை, உரிய நேரத்திற்கு உணவுண்ண முடியாமை, சுத்தமான சத்தான உணவாகஇல்லாமை போன்ற




காரணங்கள் ஆசிரியரின் உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

பாதுகாப்பற்ற சூழலில் போதிய வசதிகளின்றி வாரத்தில் 5 நாட்களும் கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப்பாடசாலைகளில் தங்கியிருந்து ஆசிரியர்கள் பணியாற்றுவதனால் உறவுகள் பற்றிய ஏக்கம் மற்றும் மன இறுக்கத்துடன் அவர்கள் பணியாற்ற வேண்டியவர்களாக உள்ளனர்.

சிறு பிள்ளைகளைக் கொண்ட ஆசிரியருக்கு தமது பிள்ளைகளிற்கான கல்வியைச் சீராக வழங்க முடியாது போகின்றது.

அத்துடன் பிள்ளைகளிற்கு கிடைக்கவேண்டிய அன்பு, அரவணைப்பு, ஆதரவு என்பன கிடைக்காமல் போகின்றது. கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர் மட்டுமன்றி அவரின் குடும்பத்தவர்களும் அவரைச் சார்ந்திருப்போரும் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் பலவற்றில் தங்குமிட வசதிகளோ, விடுதி வசதிகளோ போதிய அளவில் ஏற்படுத்தப்படாமையினால் ஆசிரியர்கள் அடிப்படை வசதிகளற்ற வீடுகளிலும் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் தற்காலிக தகரக் கொட்டில்களிலும் தங்குகின்றனர். வன்னிப்பிரதேச கஷ்ட ,அதிகஷ்டப் பிரதேசங்கள் பெருமளவிற்கு காட்டுப்புறங்களையும் பொட்டல் வெளிகளையும் கொண்டிருப்பதனால் வனவிலங்குகள் மற்றும் நுளம்புகளின் தாக்கமும் பாதிப்புக்களும் அதிகமாகும்.

பாடசாலைகளில் விடுதி வசதிகளோ சமையற்கூடங்களாகப் பயன்படுத்தத்தக்க கட்டடங்களோ இன்மையால் சமைத்து உண்பதிலும் பல சிரமங்களை ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர். பெண் ஆசிரியைகளும் வயது முதிர்ந்த ஆசிரியர்களும் நோய் நிலைமைகளில் உள்ள ஆசிரியர்களும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் அவர்கள் அடிக்கடி விடுமுறை எடுக்கின்றனர். இவ்வாறு ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற இடர்பாடுகள் ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

மிகவும் தூரப்பிரதேசங்களில் ஆசிரியர்கள் கடமையாற்றுவதனால் தமது கற்கைநெறிகளைத் தொடர்வதில் இடர்பாடுகளைச் சந்திப்பதோடு வலயக்கல்வி அலுவலகங்கள் பாடசாலையிலிருந்து மிகத் தொலைவில் இருப்பதனால் ஆசிரியர் தமது நிர்வாக அலுவல்களைப் பூர்த்தி செய்வதிலும் செயலமர்வுகளில் பங்குபற்றி தம்மை இற்றைப்படுத்திக் கொள்வதிலும் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர்.

போக்குவரத்து வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றப் பணிக்கப்பட்ட ஆசிரியர்கள் பல்வேறு துன்பங்களைச் சுமந்து நீண்டகாலமாக இடமாற்றமின்றிப் பணியாற்றுவதாலும் உரிய காலப்பகுதியை பூரணப்படுத்தி விட்டு இடமாற்றத்தைக் கோரும்போது அதனை வழங்கத் தயாராக இல்லாத போது அல்லது மறுக்கின்ற போது அல்லது பின்னடிக்கின்ற போது ஆசிரியர் எதிர்பார்த்த இடமாற்றம் வழங்கப்படாமையினால் ஆசிரியர்களிற்கு ஏற்படுகின்ற மன அழுத்தம் தொழில் விரக்தியை உண்டு பண்ணுகின்றது.

வசிப்பிடங்களிலிருந்து தொலை தூரத்திலுள்ள கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களில் கடமைபுரியும் ஆசிரியர்களது பணி உயர்வானதாகவும் உன்னதமான சேவையாகவும் காணப்படுவதோடு பல்வேறு துன்ப துயரங்களிற்கு உட்பட்டுப் பணிபுரிய வேண்டியதாகவும் உள்ளது. பல்வேறுபட்ட துன்பங்கள் ஆசிரியரை நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கி வருகின்றன. சில சமயங்களில் ஆசிரியரின் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கும் காரணமாகின்றன. தூரப்பிரதேச கஷ்ட, அதிகஷ்ட பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற அழுத்தங்களும் சுமைகளும் பின்தங்கிய வறிய மாணவரின் கல்வி வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்வதோடு கல்வியின் தரம் வீழ்ச்சியடையவும் காரணமாகின்றது.

ஆசிரியர்களின் வாண்மைத்துவத்திறன்களும் வினையாற்றல்களும் பூரணமாக வெளிப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் மாணவரின் அடைவுமட்டத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. அரச நிறுவனங்களும் அலுவலகங்களும் ஓரளவு வசதியான பிரதேசங்களில் காணப்பட கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளோ போக்குவரத்து வசதிகளற்ற குக்கிராமங்களிலும் காடுகளை அண்டிய பிரதேசங்களிலும் பொட்டல் வெளிகளிலும் காணப்படுவதனால் அவற்றின் அமைவிடம் ஆசிரியர்களைக் கவரும் வகையில் இருக்கவில்லை. அத்துடன் அவர்களிற்குத் தேவையான பௌதீக வளங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப்பாடசாலைகளிற்கும் பௌதீக வளங்களுடன் கூடிய வசதியான நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வுகளை இயன்றளவு குறைப்பதற்கான முயற்சிகள் அரசியல் தலைவர்களாலும் கல்விப்புலம் சார்ந்தோர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாயினும் அவை பூரண வெற்றியைத் தரவில்லை. அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவமான வளங்களின் ஒதுக்கீட்டை கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இரு பிரதேச பாடசாலைகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளை ஓரளவேனும் குறைக்கமுடியும். இல்லா விட்டால் கல்வித்துறை வீழ்ச்சிக்கு அது காரணமாக அமையலாம். கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு ஆசிரியர்கள் விரும்பாமைக்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படாமையும் காரணமாகலாம். இந்நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏற்றத்தாழ்வற்ற வளங்களின் பங்கீட்டை உறுதிப்படுத்துவதற்கு கல்விப்புலம் சார்ந்தோர் மானசீகமாக அக்கறை காட்ட வேண்டும்.

கஷ்ட, அதிகஷ்ட பிரதேச ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெருமளவிற்குத் துணை நிற்பதாலும் பின்தங்கிய ஏழைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் கருணையுடன் கூடிய சேவையாகவும் இருப்பதனால் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள், சிக்கல்கள், சவால்கள் என்பன அவர்களின் வினையாற்றல்களைப் பாதிப்பதனால் அவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டும். இது பின்தங்கிய கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிற்கும் அங்கு கல்விகற்கும் பின்தங்கிய வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குச் செய்யும் பேருதவியாக அமையும்.

மிக நீண்டகாலமாக தொலை தூரத்திலுள்ள கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியர் கடமையாற்றுகின்ற போது கற்றல் கற்பித்தலில் தொய்வு நிலைமைகள் ஏற்படுவதனால் பக்கச்சார்பற்ற முறையில் இடமாற்றத்தை வழங்குவது அவசியமானது. பல்வேறு துன்ப துயரங்களிற்கு மத்தியில் மாணவர்களது கல்விக்காக முற்று முழுதாக அர்ப்பணித்தவர்களது சேவை மனப்பாங்கைக் கருத்திற்கொண்டு உரிய காலத்தில் இடமாற்றத்தினை வழங்குவதில் கல்விப்புலம் சார்ந்தோர் உறுதியாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்களிற்கு ஏற்படுகின்ற வேலை அழுத்தங்களுடன் வெளி அழுத்தங்களும் இணையும் போது பொருத்தமான கல்வியை நாட்டிற்கும் சமூகத்திற்கும் வழங்க முடியாது போகின்றது. ஆசிரியர் பல்வேறு அழுத்தங்களை எதிர்நோக்குகின்ற போது நாட்டிற்கேற்ற நற்பிரஜைகளை எவ்வாறு உருவாக்க முடியும்?

ஒரு நாட்டின் இளஞ்சிறார்களை வழிநடத்துகின்ற பாரிய பொறுப்பிலிருக்கின்ற ஆசிரியர்கள் உளத் திருப்தியுடனும் துன்பங்கள் எதுவுமற்ற நிலையிலும் காணப்படும் போதே அவர்களிடமிருந்து நிறைவான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது மிகப்பெரிய உண்மையாகும். ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற வசதியீனங்களைச் சீர்செய்யாமல் அவர்களிடமிருந்து முழு நிறைவான பணியினை எதிர்பார்ப்பதென்பது கேள்விக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கேலிச்சித்திரம்

## மொரகஹகந்த நீர்த்தேக்க திட்டம் தன்னுடையது என்கிறார் மகிந்த

மொரகஹகந்த நீர்த்தேக்க தட்டம் தன்னுடைய வேலைத் திட்டம் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரிமை கோரியுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலங்களில் யுத்தத்திற்கு பாரிய எவு பணம் செலவிடும் போது கூட, இதற்கு முதலில் நிதி ஒதுக்கப்பட்டது. அதன் பின்னர் சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியாலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இதனைக் கூறியிருந்தார்.

அந்த வேலைத் திட்டத்திற்கு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன மிகவும் அக்கறை செலுததியதாகவும், அதை மிகத் தெளிவாக கூற முடியும் என்றும அவர் தெரிவித்தார்.(இ-7-10)

## முரளி தேசிய வீரர் - நாமல்

கடந்த சில வாரங்களாக சுழல்பந்து வீசாளர் முரளியைப் பற்றி பேசாதவர்களே இல்லை என்று கூறலாம். அதிலும் முரளிக்கு சார்பாக பல சிரேஷ்ட வீரர்களும், எதிராக பலரும் குரல் கொடுத்து வருகின்றனர்.

இதற்கு காரணம் முரளி அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக கடமையாற்றுவதே.

அந்த வகையில், முரளி தேசிய வீரர் என்று புகழாரம் சூட்டி பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய வீரரான முரளி இலங்கை மீது வைத்துள்ள அன்பு மற்றும் பற்று தொடர்பில் என்றுமே சந்தேகப்படுவதற்கு இல்லை என்றும் நாமல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### பிரசன்ன ரணதுங்க மீது பாய்ச்சல்

# பாதயாத்திரைக்கு ஆதரவு இல்லை!

## ஜனாதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்தவுள்ள பாதயாத்திரைக்கு தான் அனுமதியளித்துள்ளதாக வெளிவந்துள்ள செய்திகளில் உண்மையில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக மறுத்துள்ளார்.**

ஜனாதிபதி மற்றும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை நடைபெற்றிருந்தது.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்த கூட்டு எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பிரசன்ன ரணதுங்க, தமது பாதயாத்திரை குறித்து ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்துக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிரான நடவடிக்கை களுக்கு ஜனாதிபதியின் அங்கீகாரமும், ஆதரவும் கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,தான் அவ்வாறு எந்தவொரு அங்கீகாரமோ, ஆதரவோ வெளிப்படுத்தவில்லை என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



பாதயாத்திரைக்கு தான் ஆதரவளித்துள்ளமை குறித்து பிரசன்ன ரணதுங்க வெளியிட்டுள்ள கருத்துக்கள் தவறானவை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் எந்தவொரு கட்டத்திலும் கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரை உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் தனது ஆதரவு கிடைக்கப் போவதில்லை என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7-10)

## வாய்ப்புற்றுநோய் - உலகளவில் முன்னிலை வகிக்கும் இலங்கை

உலகளாவிய ரீதியில் வாயப்புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களை கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாய்ப்புற்றுநோய்க்கு வெறறிலை மற்றும் அதன் சார்ந்த பொருட்கள் பாவனையே காரணம் என்றும் பல் வைத்திய சேவையின் பிரதிப் பணிப்பாளர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக வெற்றிலை பாவனையை முற்றாக நிறுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெற்றிலை பாவனையால் புற்றுநோயை ஏற்படுத்தும் நான்கு காரணங்கள் ஏதுவாக அமைவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வெற்றிலையில் உள்ளடக்கப்படும் பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை உள்ளிட்டவைகளை தடுக்க வேண்டும் எனவும், விகாரைகளில் பூஜை தட்டில் புற்றுநோயை உருவாக்கும் வெற்றிலையை வழங்குவது தடை செய்யப்படும் எனவும் வைத்தியர் ஜயசுந்தர நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பௌத்த மதம் மற்றும் சாசனத்தை மாற்ற இடமளிக்கப்போவதில்லை

(கொழும்பு)

பௌத்த மதம் மற்றும் பௌத்த சாசனத்தை மாற்றுவதற்கு யாருக்கும் இடமளிக்கப்போவதில்லை என பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக பௌத்த மதத்திற்கு உள்ள முன்னுரிமையையும் யாராலும் மாற்ற முடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய உரிமைகள் அமைப்பினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் டீயு.குணசேகர சொல்வதை தாம் காதில் வாங்கக்கொள்ள போவதில்லை.

அத்துடன், டீயு.குணசேகரவின் கட்சி நிலையற்ற கட்சி. தேசிய உரிமைகள் அமைப்பானது அரசியல் கட்சிகளை விட உயர்ந்தது.

இதேவேளை, தமது அமைப்புக்கு ஏனைய அரசியல் கட்சிகளுடன் எவ்வித தொடர்பும் கிடையாது. மாறாக பிரிவினைவாதத்திற்கு எதிரானவர்களுடன் தொடர்பு வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## முக்கொலை சந்தேக நபருக்கு முதலாம் திகதி வரை மறியல்

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்காச்சிவெட்டை பகுதியல் இடம்பெற்ற முக்கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சந்தேகநபரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம். கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஒரே குடும்பத்தினை சேர்ந்த மூவர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 48 மணி நேர தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிம்ன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில், நீதவான் எம்.கணேசராஜா முன்னிலையில் சந்தேக நபரை நேற்று ஆஜர்படுத்திய போது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 18 மாதக் குழந்தை பிரசாந்தன் சஸனிகா, 24 வயதான பேரினபம் விஜித்தா மற்றும் 56 வயதான கந்தையா பேரின்பம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாமின் நினைவு தினத்தை முன்னிட்டு
# இலவச ஆட்டோ சேவை




மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. கலாமுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தேனாம்பேட்டையை சேர்ந்த ஆட்டோ சாரதி கலையரசன் என்பவர் நேற்று ஒருநாள் மட்டும் தனது ஆட்டோவில் பயணிகளை இலவசமாக ஏற்றிச் சென்றுள்ளார். மேலும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரது மனதிலும் நிறைந்த அப்துல் கலாமுக்கு அனைவரும் இதய அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களிலும் அப்துல் கலாம் உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டது.

இதை தொடர்ந்து ஆட்டோ சாரதி கலையரசன் தனது ஆட்டோவில் " நான் விட்டுச் சென்ற பணியை தொடருங்கள் மாணவ செல்வங்களே! கலாநிதி ஏ.பி.ஜே. அப்துல் கலாம் என்ற வாசகத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் 27.7.2016 நேற்று ஒரு நாள் மட்டும் ஆட்டோவில் இலவசமாக பயணியுங்கள் என்றும் அவர் கூறியுள்ளார். அப்துல் கலாமின் நினைவு நாளையொட்டி ஆட்டோ சாரதி கலையரசனின் இலவச பயணிகள் சேவை அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது. ஆட்டோவில் பயணம் செய்தவர்கள் அவரை பாராட்டி சென்றனர். (இ-7-10)



மாயமான ஏ.என்.32 ரக இந்திய விமானத்தை கண்டுபிடிக்க சாகர்நிதி கப்பலில் நவீன ரோபோக்களை பொறுத்தி தேடுவதாக கடலோர பாதுகாப்பு படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அணு விஞ்ஞானி அப்துல் கலாமின் வெண்கலச்சிலை நேற்று திறப்பு








இராமேஸ்வரம் அருகே பேக்கரும்பில் அப்துல் கலாமின் வெண்கலச் சிலை நேற்று திறக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மரியாதை செலுத்தப்பட்டது. மத்திய அமைச்சர்கள் வெங்கய்யா நாயுடு, பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பாரிக்கர், பொன்.ராதாகிருஸ்ணன் ஆகியோர் சிலையைத் திறந்து வைத்தனர். அப்துல் கலாமின் 7 அடி உயர வெண்கலச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத் தினர். தமிழக அமைச்சர்கள் மணிகண்டன், நிலோபர் கபில் மற்றும் அன்வர் ராஜா எம்.பியும் அஞ்சலி செலுத்தினர். அப்துல் கலாம் நினைவிடத்தில் தேசிய நினைவகத்துக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது. (இ-7-10)

# அப்துல் கலாமின் மறைவால் உருவான வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது

## பிரதமர் மோடி தெரிவிப்பு



(டில்லி)

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் மறைவால் உருவான வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது என பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.


முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் முதலாமாண்டு நினைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் மறைவால் உரு வான வெற்றிடத்தை யாரா லும் நிரப்ப முடியாது.

தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

நமது அன்புக்குரிய டாக்டர் அப்துல் கலாம் நம்மை எல்லாம் பிரிந்து, ஒரு நிரப்ப முடியாத வெற்றிடத்தை உருவாக்கிச் சென்று இன்றுடன் ( நேற்றுடன்) ஓராண்டு ஆகி றது. அந்த மிக உயர்வான தலைவருக்கு எனது அஞ்சலிகள் என தெரிவித்துள்ளார். (இ-7-10)

பாரதச் செய்தி

# 10,000 சதுரடி நிலப்பரப்பி[ல்]
# அப்துல் கலாமின் உருவம்



மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாமின்
முன்னிட்டு மதுரவாயல் எவர்வின் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்
கலாமின் உருவத்தை மலர்களால் வடிவமைத்து அசத்தியுள்ளனர்.

# அப்துல் கலாம் நினைவிடத்தில் மாதிரி 'பிருத்வி' ஏவுகணைகள்



அப்துல் கலாம்நினைவு தினத்தையொட்டி அவரது நினைவிடத்தில் டி.ஆர்.டி.ஓ. (இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம்) சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கில் மாதிரி பிருத்வி ஏவுகணைகள், ரொக்கெட்டுகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள் ளன.

அப்துல் கலாம் வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள், எதிரி இலக்குகளை துல்லியமாக தாக்கும் பிரம்மோஸ், ஆகாஷ், பிருத்வி, தனுஷ் ஏவுகணை மாதிரிகள், மிராஜ், மிக்-2, தேஜஸ் ஆகிய போர் விமானங்களின் மாதிரிகள்பொதுமக்கள்பார்வைக்காக வைக் கப்பட்டுள்ளன. கண்காட்சியை ஓகஸ்ட் முதலாம் திகதி வரை பொது மக்கள் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# ஏவுகணை மாமனிதராக உலா வந்தவர் கலாம்

## வெங்கய்யாநாயுடு புகழாரம்



தமிழில் தாம் பேச முடியா தது வருத்தமளிப்பதாக கூறினார்.

இராமேஸ்வரம் அருகே பேக்கரும்பில் மக்களின் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் 7 அடி உயர வெண்கலச் சிலை நேற்று திறக்கப்பட்டது. அப்துல் கலாமின்முதலாம்ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய மத்திய அமைச்சர் வெங்கய்யாநாயுடு, இவ்விழாவில் தொன்மை மொழியாம் தமிழில் தாம் பேச முடியா தது வருத்தமளிப்பதாக கூறினார். வெங்கய்யாநாயுடுவின் ஆங்கில பேச்சை தமிழக பாரதிய ஜனத[ா] தலைவர் தமிழிசை மொழி பெயர்த் தார். நாட்டிற்காக தனது வாழ்வை அர்ப்பணித்தவ[ர்] அப்துல் கலாம் என அவர் புகழாரம் சூட்டினார். அப்துல் கலாமின் கனவை நிலை[நா]வாக் குவதே நாம் அவருக்கு செலுத்து[ம்] அஞ்சலி ஆகும் என்றார்.

கலாம் திருமணம் செய் யாமல் நாட்டி[ன்] வளர்ச்சியை மணமுடித்தவர் என்றார். மேலு[ம்] பேசிய அவர், ஏவு கணை மாமனிதராக உல[ா] வந்து, அணுகுண்டு சோதனை கள் மூல[ம்] நாட்டின் திற மையை உலகிற்கு பறைச[ா]ற்றியவர் என புகழாரம் சூட் டினார்.


நாட்டின் குடியரசுத் தலை வர், விஞ்ஞா[னி] இரண்டு பதவிகளிலுமே அப்துல் கலாம் முற்றிலு[ம்] மாறுபட்டவராக திகழ்ந்தார் என குறிப்பி[ட்]டார். மேலும் நாட்டிற்கு அவர் ஆற்றிய தொண்[]டுகளின் மூலம் இன்னும் அவர் நம் இத[ய]ங்களில் வாழ்ந்து வருவதாக தெரிவி[த்]தார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலச்
லாம்
ந்திய
க்கர்.
னர்.
ாவி
டன்.
னர்.
ான
-10)

# ரப்பில் மலர்களால்
# தவம் வடிவமைப்பு



துல்கலாமின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை
ம் ஆசிரியர்கள் 10.000 சதுரடி நிலப்பரப்பில் அப்துல்
ர். (இ-7-10)

தியா ஜனதா
பயர்த் தார்.
ப்பணித்தவர்
புகழாரம்
வை நினை
செலுத்தும்

மல் நாட்டின்
றார். மேலும்
திரராக உலா
கள் மூலம்
ற்கு பறைசா
ர்.
, விஞ்ஞானி
ாம் முற்றிலும்
ன குறிப்பிட்
றிய தொண்
ர் நம் இதய
க தெரிவித்
(இ-7-10)

# அப்துல் கலாம் பற்றிய சுவாரஸ்ய தகவல்கள்

இந்தியாவின் 11 ஆவது குடியரசு தலைவரான ஏபிஜே அப்துல் கலாம் கடந்தாண்டு ஜூலை 27 ஆம் திகதி காலமானார்.

இந்த உலகை விட்டு சென்றாலும் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த தலைவர் அப்துல் கலாம்.

இவரை பற்றிய சில அரிய தகவல்கள்.

தாய்மொழியான தமிழ் வழியில் கல்வி பயின்று. அறிவியல் துறையில் உலக சாதனைகள் செய்தவர் அப்துல் கலாம்.

இந்திய ஜனாதிபதிகளில் மிக. மிக எளிமையாக இருந்தவர் இவர் ஒருவரே. ஜனாதிபதி மாளிகையில் சைவ உணவுகள் மட்டுமே சாப்பிட்ட ஒரே ஜனாதிபதி இவர்தான்.

"மாணவர்களே கனவு காணுங்கள்" என்று சொல்லி மாணவர்கள் மத்தியில் புரட்சியை ஏற்படுத்தியவர்.

நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காக பெருந்தலைவர் காமராஜர் திருமணம் செய்து கொள்ள மறுத்தார். அதுபோல திருமணம் செய்தால் அறிவியல் வளர்ச்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாது என்று திருமணம் செய்ய மறுத்தார் அப்துல் கலாம்.

இவரது வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் காந்திய கொள்கைகளை பிரதிபலித்தது.

ஜனாதிபதியாக இருப்பவர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எழுதப்படாத சில மரபுகள் இருந்தன. பதவியேற்ற முதல் நாளே அந்த மரபுகளை உடைத்தவர் அப்துல் கலாம்.

அப்துல் கலாம் தன்னடகத்தின் உச்சமாக திகழ்ந்தவர். அவரைப் போன்று பணிவான மனிதர்களை காண்பது அரிது என்று உலக தலைவர்களே வியந்துள்ளனர்.

நான் என்ற அகந்தை எண்ணம் அவரிடம் துளி அளவு கூட இருந்ததில்லை. சிறு வயது முதல் வாழ்நாளின் இறுதி வரை அமைதியானவர், அன்பானவர் என்ற பாதையில் இருந்து அவர் விலகாமலே இருந்தார்.

அப்துல் கலாம் மிகப்பெரிய உறவு. நட்பு வட்டாரத்தைக் கொண்டவர். ஆனால் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அவர் யார் ஒருவருக்கும், எதற்கும் சிபாரிசு செய்ததே இல்லை.

ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கூட, அந்த மாத சம்பளத்தை வாங்கி அதில் ஒரு பகுதியை தன் குடும்பத்துக்கு அனுப்புவதை அப்துல் கலாம் வழக்கத்தில் வைத்திருந்தார்.

அப்துல் கலாமின் நெருங்கிய உறவினர்கள் எல்லாம் இன்றும் நடுத்தர வர்க்கவாசிகளாகவே உள்ளனர். அப்துல் கலாமின் கறைபடாத நேர்மைக்கு இது ஒன்றே சிறந்த எடுத்துக்காட்டு.

அனைத்து வளங்களும் நிறைந்த இந்தியா 2020 ஆம் ஆண்டில் உலகின் வளர்ந்த 5 நாடுகளில் ஒன்றாக திகழும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி இந்தியர்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தினார்.

சிறு வயதில் கிணற்றுக்குள் கலாம் கல்லைத் தூக்கிப் போட்டார். அதில் இருந்து குமிழ், குமிழாக வந்தது. அது ஏன் வருகிறது என்று அப்துல் கலாம் கேட்டார். அவர் கேட்ட முதல் அறிவியல் கேள்வி இது தான்.

அப்துல் கலாமுக்கு மிகுந்த இசை ஞானம் உண்டு. தியாகராஜ கீர்த்தனைகளில் சில கிருதிகளை அவர் தெரிந்து வைத்திருந்தார்.

1998 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி பொக்ரானில் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தி உலக அரங்கில் தன்னை வல்லரசாக அறிவித்தது. இதற்கு அடித்தளம் அமைத்தவர் அப்துல் கலாம்தான்.

1958 இல் மத்திய அரசின் பாதுகாப்புத் துறையில் அப்துல் கலாம் வேலைக்கு சேர்ந்த போது அவருக்கு மாத சம்பளமாக ரூ.250 வழங்கப்பட்டது.

இந்திய இராணுவத்தில் உள்ள திரிசூல், அக்னி, பிருத்வி, நாக், ஆகாஷ் ஆகிய ஏவுகணைகள் அப்துல் கலாம் திட்ட இயக்குநராக இருந்த போது வடிவமைக்கப்பட்டு வந்தவையாகும்.

போலியோ நோயாளிகளுக்கான எடை குறைந்த ஊன்றுகோல் மற்றும் இருதய நோயாளிகளுக்கான எடை குறைந்த ஸ்டெண்ட் கருவி ஆகியவை இவர் கண்டுபிடித்தவையாகும். அந்த ஸ்டெண்டுக்கு "கலாம் ஸ்டெண்டு" என்றே பெயராகும். இந்திய பாதுகாப்புத்துறையின் ஆய்வுக்கு முதலில் வெளிநாட்டு கருவிகள், பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றை நிறுத்தி விட்டு முழுக்க, முழுக்க உள்நாட்டு பொருட்கள் மூலம் ஆய்வுப் பணிகளை அப்துல் கலாம் செய்ய வைத்தார்.

அப்துல் கலாம் தினமும் திருக்குரான் படிக்கத் தவறியதில்லை. அதில் அவருக்கு பிடித்த வரிகள் எவை தெரியுமா?. "இறைவா! உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்" எனும் வரிகளாகும். இந்த வரிகள், என்னுடைய எல்லா சோதனை நாட்களிலும் என்னை கரை சேர்த்த வைர வரிகள் என்று அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளார். (இ-7-10)

# ஏழ்மையில் பிறந்து உழைப்பால் உயர்ந்தவர் தான் அப்துல் கலாம்


## பொன்.ராதா தெரிவிப்பு



(பேக்கரும்பு) இராமேஸ்வரம் அருகே மக்கள் ஜனாதிபதி அப்துல் கலாமின் வெண்கலச் சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன். குடியர சுத் தலைவராக இருந்த போது திரு வள்ளுவர் சிலையை ஜனாதிபதி மாளிகையில் கலாம் நிறுவியதை நினைவு கூர்ந்தார். மேலும் சாதி. மதம். மொழியை கடந்து அனைவரும் நாட்டுக்காக உழைக்க வேண்டும் என வலியுறுத்தியவர் கலாம் என்றார்.

அப்துல் கலாம் ஏழ்மையில் பிறந்து உழைப்பால் உயர்ந்தவர் என அமைச்சர் ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டினார். மேலும் கலாம் தேசிய நினைவகப் பணிகள் ஓராண்டிற்குள் முடிக்கப்பட்டு திறக்கப்படும் என உறுதியளித்தார். (இ-7-10)

# அப்துல் கலாமின் அரிய புகைப்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோபக்கார முனிவர்

“காலையில் எழுந்து என் நித்திய கடன்களை முடித்து விட்டு வீட்டு வேலைகளிலும் வெளி வேலைகளிலும் பங்கேற்கிறேன். எல்லோருக்கும்என்னாலான உதவி களைச் செய்கிறேன. கோபம், பொறாமை,ஆசை இவற்றை விட்டொழித்து மனதினாலும், வாககினாலும், உடலினாலும் பலருக்கும் நன்மை புரிகிறேன்!” என்றார் மாதவன்.

பூஜை, புனஸ்காரம், தவம் இவை எதுவுமே செய்யாமல் இவனுக்கு எப்படி புண்ணியம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் சுதீவர், “நீங்கள் கடவுளை தியானம் செயவது கிடையாதா?” என்றார்.

“கடவுள் என்னிலும் இருக்கிறார். மற்றவர்களிடமும் இருக்கிறார். சகல உயிரகளிலும் உறைகிறார். அவரைத தனியாக பூஜையோ, தியானமோ ஏன் செய்ய வேண்டும்? மற்றவர்களுக்கு உதவி செய்தாலே, அது கடவுளுக்காக செய்யப்படும் பூஜை, தியானம், தவம் அனைத்தும் ஆகும்!” என்றார மாதவன். சுதீவருக்கு மாதவன் தன்னை ஏளனம் செய்கிறார் எனத் தோன்றியது.



“நீர் நான் செய்யும் தவமெல்லாம் வீண் வேலை என்று பொருட்படக் கூறுகிறீரா?” என்று கோபத்துடன் சுதீவர் கேட்டார்.

“சுவாமி! நான் உங்களைப் பற்றியோ, உங்கள் தவத்தைப் பற்றியோ குறை கூறவல்லை. நான் என்னுடைய கருத்தைக் கூறுகிறேன்!” என்றார் மாதவன் பணிவுடன்.

கோபத்துடன் குதித்து எழுந்தார் சுதீவர். “உன்னைப் போன்ற நாஸ்திகனை மன்னிக்கவே கூடாது. இந்த நிமிடத்திலிருந்து நீ கண்பார்வை இழந்து நடக்க முடியாமல படுக்கையில் வீழ்வாய்!” என்று சாபமிட்டார்.

ஆனால், மாதவனுக்கு ஒன்றுமே ஆகவில்லை. மீண்டும் மாதவன் பணிவுடன், “சுவாமி! சாந்தம்அடையுங்கள். உங்களைப் போன்ற மகான கோபம் அடையும் படி நான பேசியது தவறு தான்!” என்று மன்னிப்புக் கேட்டார்.

“மாதவா! என் சாபம் உனக்குப் பலிக்கவில்லை. நீ என்ன மகாத்மாவா?” என்றார் சுதீவர்.

“சுவாமி! அப்படியில்லை. காட்டுவாசி, அழகான இளம் பெண், வழியில் கண்ட இளைஞன் ஆகியோருக்கு சாபம் கொடுத்து தங்கள் தவ வலிமை நஷ்டமாகி விட்டது. நான் மட்டுமில்லை இனி நீங்கள் யாருக்கு சாபம் கொடுத்தாலும் அது பலிக்காது. போகட்டும் நீங்கள் என்னிடம் பெற வந்த புண்ணியத்தின் ஒரு பகுதியை உங்களுக்கு இப்போது நான் அளிக்கிறேன்.

“அந்தப் புண்ணியத்தினால் நீங்கள் சாபமிட்டவர்கள் எல்லாருக்கும் இந்தக் கணத்திலிருந்து சாபம் நீங்கிவிடும்.

உங்கள் தவவலிமையை இந்த வினாடியிலிருந்து நீங்கள் மீண்டும் பெற்று விட்டீர்கள். நீங்கள் விரும்பினால் இப்போது எனக்கு சாபம் கொடுக்கலாம். அது பலிக்கும்!” என்றார்.

தனது செய்கைகளினால் அவமானம் அடைந்த சுதீவர் மாதவனுக்கு நன்றி கூறிவிட்டு மவுனமாக தன் குருவைத் தேடிச் சென்றார். வரும் வழியில், தான் சாபமிட்டவர்கள் மறுபடியும் தன் நிலைக்கு மாறி இருப்பதை அவர் கண்டார். தனது குரு சுசாந்தரிடம் நடந்தவற்றைக் கூறி அதற்கு விளக்கம் கேட்டார்.

“தவத்தினால் பல சக்திகளை அடையலாம். ஆனால், தன் கடமையைச் சிறப்பாக செய்பவனும், பிறருக்கு உதவி செய்வதையே லட்சியமாகக் கொண்டவனுமான ஒரு மனிதன் ஒரு தவயோகியை விட அதிகப் புண்ணியம் செய்தவன் ஆகிறான்!” என்றார்.

“குருவே! இப்போது மாதவன் தான் செய்த புண்ணியத்தை தானம் செய்து விட்டான். ஆகையால் அவனுடைய சக்தியும் குறைந்து விடும் அல்லவா?” என்று சுதீவர் சந்தேகம் கேட்டார்.

“மற்றவர்களுக்காகத் தன் புண்ணியத்தையே தானம் செய்தால் அதுவே பெரிய புண்ணியம். மாதவனின் சக்தி குறைய்வில்லை. முன்னைவிட இப்போது அதிகமாகிவிட்டது!” என்றார் சுசாந்த முனிவர்.

“குருவே! முன்னைவிட என் தவவலிமையை அதிகமாக்குவேன். நான் மீண்டும் காட்டுக்குத் தவம் புரியச் செல்கிறேன்!” எனறு கூறி விடை பெற்றார் சுதீவர். (முற்றும்)

## 07.2016 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1364 - பிசா குடியரசுப் படைகளும், ப்ளோரன்ஸ் குடியரசுப் படைகளும் இத்தாலியில் உள்ள காசினா என்ற இடத்தில் மோதிக் கொண்டன.
- 1493 - மாஸ்கோவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.
- 1540 - இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் ஆணைப்படி தொமஸ் குரொம்வெல் நாட்டுத்துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அதே நாளில் ஹென்றி தனது ஐந்தாவது மனைவி கத்தரீனை மணந்தான்.
- 1586 - முதற்தடவையாக உருளைக் கிழங்கு பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.
- 1609 - பெர்முடாவில் ஆங்கிலேயர்கள் குடியேறினர்.
- 1794 - பிரெஞ்சுப் புரட்சி: மாக்சிமிலியன் ரோப்ஸ்பியர் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனைக்கு உள்ளாக்கப் பட்டான்.
- 1808 - இரண்டாம் மஹ்மூத் ஓட்டோமான் பேரரசின் சுல்தனாகவும், இஸ்லாமிய கலிபாவாகவும் ஆகினார்.
- 1821 - பெரு ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1914 - முதலாம் உலகப் போர் ஆரம்பமானது. செர்பியா மீது ஆஸ்திரியா-ஹங்கேரி போர் தொடுத்தன.
- 1915 - ஐக்கிய அமெரிக்காவின் ஹெயிட்டி முற்றுகை ஆரம்பமானது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் ஹாம்பூர்க் நகர் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் 42,000 ஜேர்மனியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1945 - அமெரிக்க போர் விமானம் ஒன்று எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தின் 79ம் மாடியில் தவறுதலாக மோதியதில் 14 பேர் கொல்லப்பட்டனர்.
- 1957 - ஜப்பானின் இசகாயா என்ற இடத்தில் மழை, மற்றும் மண்சரிவு காரணமாக 992 பேர் கொல்லப்பட்டனர்.
- 1965 - வியட்நாம் போர்: தெற்கு வியட்நாமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை 75,000 இலிருந்து 125,000 ஆக அதிகரிக்கப்படும் என அமெரிக்க அதிபர் லின்டன் ஜோன்சன் அறிவித்தார்.
- 1976 - சீனாவில் டங்ஷான் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 242,769 பேர் கொல்லப்பட்டனர். 164,851 பேர் காயமடைந்தனர்.
- 1996 - வாஷிங்டனில் கென்னவிக் என்ற இடத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2005 - ஐரியக் குடியரசு இராணுவம் தனது 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்தது.
- 2005 - இங்கிலாந்து, பேர்மிங்காம் நகரைச் சூறாவளி தாக்கியதில் +4,000,000 பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. 39 பேர் காயமடைந்தனர்.
- 2006 - ஈழப்போர்: வாகரையில் இலங்கைப் போர் விமானங்கள் தாக்கியதில் பலர் கொல்லப்பட்டனர்.


### பிறப்புகள்

- 1936 - சோபர்ஸ், மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் துடுப்பாளர்.
- 1951 - சந்தியாகோ கலத்ராவா, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கட்டிடக்கலைஞர்.
- 1954 - குகொ சவெஸ், வெனிசுவேலா ஜனாதிபதி.
- 1977 - மனு ஜினோபிலி, ஆர்ஜெண்டீனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### சிறப்பு நாள்

- பெரு - விடுதலை நாள் (1821)

## மனு ஜினோபிலி




இமான்யுவெல் டேவிட் ஜினோபிலி அல்லது மனு ஜினோபிலி (எசுப்பானிய மொழி: Emanuel David Ginobili> பிறப்பு - ஜூலை 28, 1977) ஒரு அர்ஜென்டினா கூடைப்பந்து ஆட்டக்காரர் ஆவார். இவர் என். பி. ஏ.-இல் சான் அன்டோனியோ ஸ்பர்ஸ் என்ற அணியில் விளையாடுகிறார். 2004ம் ஆண்டு ஒலிம்பிக் கூடைப்பந்துப் போட்டிகளில் இவர் தங்கம் பரிசு வெற்றிபெற்ற அர்ஜென்டினா அணியில் விளையாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனோரின் நிலை என்ன? விபரம் கோருகிறது செஞ்சிலுவைக்குழு

(கொழும்பு)

காணாமற்போயுள்ள 16 ஆயிரம் பேரின் நிலை என்னவென்று அவர்களின் உறவினர்களுக்கு அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று, அனைத்துலக செஞ்சிலுவைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் காணாமற்போனோர் தொடர்பாக ஜெனிவாவைத் தளமாக கொண்ட அனைத்துலக செஞ்சிலுவைக் குழு நடத்திய- 14 மாத கால ஆய்வின் முடிவில் வெளியிட்டுள்ள 34 பக்க அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உறுதியற்ற நிலையில் வாழுதல் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில், இலங்கையில் காணாமற்போன 16 ஆயிரம் பேரின் ஆயிரக்கணக்கான உறவினர்கள், பெரும்பாலும் தமிழர்கள் தமது அன்புக்குரியவர்களை இன்னமும் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

395 குடும்பங்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் மூன்றில் ஒரு பங்கினர், காணாமற்போயுள்ள தமது உறவுகள் இறந்து போயிருக்கலாம் என்று நம்புகின்றனர். மூன்றில் ஒரு பங்கினர் எங்காவது உயிருடன் இருக்கலாம் என்று நம்புகின்றனர். ஏனைய மூன்றில் ஒரு பங்கினர் எதையும் கூற முடியாமல் உறுதியற்ற நிலையில் இருக்கின்றனர்.

இந்தக் குடும்பங்களுக்கு காணாமற்போனவர்களின் நிலை என்னவென்று அறிவதே முக்கியமானதாக உள்ளது.

அதேவேளை, இவர்கள் நாளாந்த வாழ்வில் பொருளாதார, சட்ட, நிர்வாக ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்.

எனவே, காணாமற்போனவர்களின் நிலை என்ன? அவர்களுக்கு என்னவாயிற்று என்பதை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அனைத்துலக செஞ்சிலுவைக்குழு கோரியுள்ளது. (இ-7-10)

# நாட்டைச் சுற்றி வந்தாலும் ஆட்சியை அசைக்க முடியாது

## அதீத நம்பிக்கையில் அமைச்சர் ஹரின்

(கொழும்பு)

**அரசாங்கத்திற்கு எதிராக பாதயாத்திரை அல்ல நாட்டையே சுற்றி வந்தாலும் எமது அரசாங்கத்தை அசைக்க முடியாது என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்துள்ளார். உயர்ந்த இடத்தில் இருந்தவர்கள் இன்று வீதிக்கு வந்துவிட்டனர். வீதிக்கு வந்தவுடன் ஆட்சியை கவிழ்க்க முடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.


இந்நிலையில், கொழும்பு துறைமுக நகரத் திட்டமானது, நிதி நகர திட்டமாக பெயர் மாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஆட்சியில் நாட்டின் முக்கிய நிலங்கள் சீனாவுக்கு வழங்கப்பட்டதைப் போன்று நல்லாட்சி அரசாங்கம் ஒருபோதும் செய்யாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# அமெரிக்கப் போர்க்கப்பலில் கடற்படையினருக்குப் பயிற்சி

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும், அமெரிக்கப் போர்க்கப்பலில் இலங்கை கடற்படையினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்கக் கடற்படையின் ஈரூடக போக்குவரத்துத் தள போர்க்கப்பலான, யுஎஸ்எஸ். நியூ ஓர்லியன்ஸ் கடந்த திங்கட்கிழமை மாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.



இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் நிலையில், இலங்கை கடற்படையினருடன், அனர்த்த கால மற்றும் மனிதாபிமான உதவிகள் தொடர்பாக, கடற்படையினருக்கு அமெரிக்க கடற்படையினர் பயிற்சி அளித்து வருகின்றனர்.

அத்துடன், அமெரிக்க- இலங்கை கடற்படையினருக்கிடையில், கூடைப்பந்து, எல்லே உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

இருநாட்டுக் கடற்படையினருக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இந்தப் பயணம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சிறை செல்லும் ஊழல்வாதிகளின் கைகளில் பிரித் நூல் கட்டுகின்றனர் பௌத்த பிக்குகள்

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் சிறைக்குச் செல்லும் போது அவர்களின் கைகளில் பிரித் நூல் கட்டும் பௌத்த பிக்குகள் இன்று இலங்கையில் இருக்கின்றார்கள் என தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வகாமுல்லே உதித்த தேரர் தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச சொத்துக்களை கொள்ளையிட்டு கைவிலங்கு இடப்பட்டு சிறைக்குச் செல்லும் அரசியல்வாதிகளின் கைகளில் பிரித் நூல் கட்டும் பௌத்த பிக்குகள் இருக்கின்றார்கள்.

பிக்குகள் சமூகம் துண்டு துண்டுகளாக பிளவடைந்துள்ளது.

எனவே நாட்டின் புதிய சமூகமொன்றை கட்டியெழுப்ப முன்னிலை வகிக்க வேண்டியேற்பட்டுள்ளது. இன்று பண்புகள் சீரழிந்துள்ளன. சில பௌத்த பிக்குகள் தமது பிக்குதனத்தையும் பணத்திற்கு விற்பனை செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

25 ஆயிரம் ரூபா வழங்கினால் பௌத்த உபதேசம் சொற்பொழிவு வழங்கும் பௌத்த பிக்குகள் இருக்கின்றார்கள் இல்லையா?

அரச சொத்துக்களை கொள்ளையிட்டு சிறைக்குச் செல்லும் அரசியல்வாதியின் கைகளில் பிரித் நூலைக் கட்டி அவர்களை வீரர்களாக்குவது பௌத்த பிக்குவின் கடமையல்ல.

அரசியல்வாதிகள் காலத்திற்கு காலம் பௌத்த பிக்குகளை ஏமாற்றி வருகின்றனர்.

எமது தலைவர்கள் எங்[illegible]களை [illegible] எடுத்து, வரி அறவீடு செய்து அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்களையும் மாளிகைகளையும் வழங்குவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்கள் சொத்துக்கள் கொள்ளையிடப்படுகின்றன. பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு சொந்த வீடுகள் வாழ்நாள் முழுவதிலும் கிடைக்காத நிலைமை காணப்படுகின்றது.

சிறுநீரக நோய்களினால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் சமூக முறைமையை முற்று முழுதாக மாற்றி அமைக்கவேண்டும்என [illegible] உதித்த தேரர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## நீங்கள் மாறி விட்டீர்களா?

“அவர் முன்ன மாதிரி இல்லப்பா, அடியோட மாறிட்டார்ப்பா”

“நாலு காசு சேர்ந்ததும் நம்மையெல்லாம் கண்டுக்கவே மாட்டேங்கிறாப்பா”

“கல்யாணம் ஆனதிலேயிருந்து நீ ரொம்ப மாறிட்டே”

என்றெல்லாம் குற்றச்சாட்டுக்களைப் பலர் தொடுத்த வண்ணம் இருக்கிறார்கள். சிலவற்றில் பொருள் இருக்கும். சில பொறாமைக் காரணமாகப் போலியாக இருக்கும்.

பணம், புகழ் ஆகியவற்றின் சேர்க்கை மனிதனை ஓர் உலுப்பு உலுப்பிவிடுவது என்னவோ உண்மை. குடிபோதை மிக்கவன் நிதானத்துடனும் நேராகவும் நடப்பது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம், ஒருவன் செல்வச் செருக்கிலும் புகழ் போதையிலும் எப்போதும் போல் நடந்து கொள்வது.

சந்தர்ப்பவசத்தாலோ உழைப்பாலோ வாழ்வில் உயர்ந்து விடுபவர்கள், தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்வதுடன் பிறரும் அப்படி மெச்ச வேண்டும் என்றும் முன்னைக் காட்டிலும் தங்களுக்குக் கூடுதலாக முக்கியத்துவம் தரப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள். இது மனித இயல்பு. ஆனால் இந்தக் குறையைத் தவிர்ப்பது தான் நமக்குப் பெருமை சேர்க்கும்.

மற்றவர்கள் தொடுக்கும் குற்றச்சாட்டுக்களை நாம் ஒவ்வொருவரும் உண்மை தானா என நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

நாம் உண்மையில் மாறித்தான் போய் விட்டோமோ, என்றெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். விடை கிடைக்காவிட்டால் குற்றம் சாட்டியவர்களிடம் நாம் பேசிப் பார்க்கலாம்.

புதிதாகத் திருமணமானவர்கள் மீது இந்தக் குற்றச்சாட்டு மிக அதிகமாகக் கூறப்படும். திருமணமானதும் எல்லோரும் மாறிவிடுவார்கள் என்ற அழிக்க முடியாத நினைப்பு அவர்களுடைய இயல்பான நடவடிக்கைகளைக் கூடப் பார்ப்பவர்களை வேறு விதமாக எண்ண வைக்கிறது அவ்வளவே!.

இந்த உலகை விட பெரிய இடம் கொண்ட இதயத்தில் இடக்கட்டுப்பாடு என்ற பிரச்சினை எழ வாய்ப்பில்லை. எத்தனை புதிய தொடர்புகள் ஏற்பட்டாலும் அத்தனையையும் கொள்ளக் கூடிய வலிமை அதற்கு உண்டு. எனவே ஒன்று நுழையும்போது ஒன்றை வெளியேற்ற வேண்டிய அவசியமில்லை.

நம்முடைய வளர்ச்சியை விட நாம் எப்போதும் போல் இருக்கிறோமா-பழகுகிறோமா? என்பது குறித்துத்தான் இந்த உலகம் அதிகமாக அக்கறை கொள்கிறது.

இதை மனத்தில் கொள்ளாமல் நடப்பது புத்தசாலித்தனமில்லை. மரியாதை தருவது, அன்பு காட்டுவது ஆகியவை பரஸ்பர உணர்வுகள், நாம் அவற்றைச் செய்யும் போது அவை நமக்குச் செய்யப்படுகின்றன.

புதிய வரவுகளும் புதிய உறவுகளும் நம் சூழ்நிலையையும் இதயத்தையும் மாற்றிவிட இடங்கொடுக்கக்கூடாது என்ற உறுதியும் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அப்போதுதான். நம் வளர்ச்சியும் சூழ்நிலை மாற்றமும் மற்றவர்களால் ஏற்கப்படும் சூழ்நிலை உருவாகும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதவியை இலக்கு வைக்கும் பாதயாத்திரை

ஐ.தே.க அரசாங்கத்துக்கு எதிராக முன்பு பாதயாத்திரை சென்ற மகிந்த ராஜபக்ஷவுக்கு அந்த நினைவுகள் இன்றும் பசுமை மாறாமல் அப்படியே இருக்கின்றன.

இதுதான் அவர் மீண்டும் ஒரு பாதயாத்திரையை மேற்கொள்ள அவருக்குத் தூண்டுதல் கொடுத்திருக்கிறது எனலாம்.

ஆனால், ஒரே ஒரு வித்தியாசம்.

இந்தத் தடவை ஐ.தே.கவுடன் ஸ்ரீ.ல.சு.கவும் இணைந்து ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கின்றன.

மக்களின் வாழ்க்கைத் தரம், அவர்களுடைய கஷ்டங்களை சற்றேனும் கண்டு கொள்ளாது ஸ்ரீ.ல.சு.கவின் தலைமைப் பதவியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் மகிந்த தற்போது 'வற்' வரி அதிகரிப்பை கையிலெடுத்து கண்டியிலிருந்து கொழும்புக்கு பாதயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்.

இன்று தொடங்கும் பாதயாத்திரை ஓகஸ்ட் முதலாம் திகதி கொழும்பை வந்தடையும்.

கண்டி தலதா மாளிகைக்கு எதிர்ப்புறமிருந்து சங்கசபாவின் ஆசியுடன் இந்த பாதயாத்திரை தொடங்க இருக்கிறது.

பதவிப் போட்டிக்கான இந்த யுக்தியில் மதவாதம் சிறிதளவே சம்பந்தப்பட்டிருக்கிறது.

ஆனால் மழுங்கிப் போன அரசியல் கலாசாரம் தான் இதில் பிரதான பங்காளராக முன்னிற்கிறது.

பாதயாத்திரைக்கு ஏற்பாடு செய்துள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கொழும்பு வைத்தியசாலையில் தடுப்புக் காவல் ஓய்வில் சிந்தனை செய்து கொண்டிருக்கிறார்.

'வற்'வரிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், பாதயாத்திரையும் மகிந்த அணிக்கான பிரசாரமாகப் பயன்பட்டாலும், அரசாங்கத்தில் இரண்டு பிரதான கூட்டணிக் கட்சிகளாக இருக்கின்ற ஐ.தே.கவும் ஸ்ரீ.ல.சு.கவும், கொள்கை விடயங்களில் அதிகளவு புரிந்துணர்வு ஒன்றை எட்ட வேண்டியதன் தேவையை அது கோடிட்டுக் காட்டுகிறது.

'வற்' சம்பந்தமான பேச்சுக்கள் தொடங்கியபோதும் விலைகள் அதிகரிக்கப்பட்ட போதும், விலைகளை அதிகரிக்கும் அதிகாரிகளை தாம் நீக்கி விடப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

உண்மை என்னவென்றால் இந்த 'வற்' வரியானது அரசாங்க நிதிக் கொள்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது.

அத்துடன் நாட்டின் நெருக்கடியான நிதி நிலைமையைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் ஒரு பகுதி கடன் பெற்ற போது 'வற்' வரி அறவிட வேண்டியதன் தேவை அதிகரித்தது.

இங்கு முக்கியமான பிரச்சினை என்னவென்றால் 'வற்' வரி மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான விவகாரங்களில் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் போதுமான அளவு தொடர்பாடல் இன்மைதான்.

'வற்' வரி இலங்கை மக்களுக்கு புதியதோர் விடயமல்ல என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த அரசாங்கம் பல்வேறு பாவனையாளர் பொருட்கள் மீது 11 சதவீத 'வற்' வரியை சுமத்தியிருந்தது.

ஆனால் பல பொருட்கள் மீதான நான்கு சதவீத 'வற்' வரி அதிகரிப்பு இதுவரை 'வற்' வரி விதிக்கப்படாத சேவைகள் மீதான அதன் தாக்கம் என்பன பொதுமக்களுக்கு தெளிவாக விளக்கிக் கூறப்படவில்லை.

இதில் அரசாங்கத்தின் நிதி, பொருளாதார அபிவிருத்தி, உணவு, மருத்துவ சேவைகள் தொடர்புத் துறைக்குப் பொறுப்பான பிரிவுகள் சரியான செய்தியை திருப்திகரமான அளவுக்கு மக்களிடம் எடுத்துச் செல்லவில்லை.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குப் பலத்தால் 'வற்' வரி அதிகரிப்புக்கு இலகுவாக ஒப்புதல் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் அது பற்றிய தொடர்பாடலின் அவசியம் அலட்சியம் செய்யப்பட்டது.

இந்த நிலைமையில்தான் கூட்டு எதிரணியின் விமல் வீரவன்ச சட்ட அடிப்படையைக் காரணம் காட்டி 'வற்' வரி அதிகரிப்பு நடைமுறைப்படுத்துவதை தடுக்கும்படி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றம் 'வற்' வரியும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறும் வரையிலோ அல்லது நீதிமன்றம் அது பற்றி முடிவு செய்யும் வரையிலோ அந்த வரிகள் அறவிடப்படுவதற்கு எதிராக இடைக்காலத் தடை விதித்தது.

இந்த இடைக்காலத் தடை உத்தரவு அரசாங்கத்துக்கு மகிழ்ச்சியான ஒரு அறிவிப்பாகவே வெளிவந்தது.

சம்பந்தப்பட்ட வரி தொடர்பான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் ஜூலை 20 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என பிரதமர் உடனே அறிவித்து அந்தப் பிரச்சினையின் தீவிரத் தன்மையை சற்றுத் தணித்தார்.

ஆனால் அத்துடன் பிரச்சினை ஓய்ந்து விடவில்லை.அடுத்ததாக, 'வற்' வரி சட்டயாப்புக்கு முரணானது என்றும் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் பொதுசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தவேண்டுமெனவும் மற்றுமோர் மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பிலான தனது கருத்தை நீதிமன்றம் விரைவில் தெரிவிக்க இருக்கிறது.

எனவே சற்றுக் காத்திருக்க வேண்டும்.

பொதுமக்களை அரசாங்கத்துக்கும் 'வற்' வரிக்கும் எதிராக தூண்டுவோர் வர்த்தகர்களின் ஆர்ப்பாட்டங்களால் பெரும் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது.

தமது கடைகளை இழுத்து மூடும் பெரும்பாலான வர்த்தகர்கள் 'வற்' வரி கட்டுபவர்கள் அல்ல என்பதல்ல இன்றைய பிரச்சினை.

நடைபாதை வியாபாரிகள் கூட இதற்குள் இழுத்து விடப்பட்டிருப்பது தான் ராஜபக்ஷ ஆதரவு அணியின் வெற்றிகரமான சாணக்கியமாக கருதப்படுகிறது.

தற்போது அரசாங்கத்திலுள்ள ஸ்ரீ.ல.சு.கவினர் இரட்டை நாக்குடன் பேசுகிறார்கள்.

அமைச்சரவையின் ஒட்டுமொத்த பொறுப்பு அலட்சியப்படுத்தப்பட்டு கட்சிக்குள் மேலும் பிளவுகள் ஏற்பட வழிகள் திறந்து விடப்படுகின்றன.

அவர்கள் தற்போதைய அரச முறைமையைப் பற்றியல்ல, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பற்றியே கவனம் செலுத்துகிறார்கள்.

முன்பை விட பொதுமக்களுடன் அதிக தொடர்பாடல்களை இப்போது தொடங்க வேண்டும்.

கூட்டணி அரசாங்கத்தின் கொள்கை வெற்றிபெற வேண்டுமென்றால் அரசமைப்பு முறைமையில் ஒழுக்கம் கொண்டு வரப்படுவது கட்டாயம்.

லூஷியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி யினுடைய ஆலயமாக மன்றைக் கருதுகின்றோம்



## மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரையில் இங்குள்ள சிறுவர்கள் கடந்த 30 வருட கால யுத்தத்தினாலும், அதன் பின்னர் ஏற்பட்ட வறுமையின் காராணத்தினாலும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா தெரிவித்தார்.

சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களை தடுக்கும் வகையில் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்னார் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டின் நேற்று முன்தினம் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், சிறுவர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாக பல்வேறு மட்டங்களில் ஆராய்ந்து ஒருவருக்கு தண்டனை வழங்குவதை விட அடிப்படையில் அவர்களை திருத்தம் செய்து எதிர்காலத்தில் அவர்களை சிறந்த பிரஜைகளாக மாற்ற வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இன்றைய காலகட்டத்தில் தமது சொந்த வீட்டிலும் வெளியிலும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

நீதிமன்றத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் என வழக்கு தாக்கல் செய்யப்படுகின்ற போது அந்த வழக்கினை நாங்கள் மிகவும் கண்ணியமாக வேறு யாருக்கும் தெரியாத வகையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நிவாரணத்தை நாங்கள் பெற்றுக் கொடுக்கின்றோம்.

இதற்கு எங்களுடைய சட்ட வைத்திய அதிகாரிகள் பாரிய ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். ஒரு சிறுவன் அல்லது சிறுமி பாதிக்கப்பட்டால் அவர் கள் தொடர்பான எந்த ஒரு விபரங்களையும் நாங்கள் வெளியிடாது இரகசியமான முறையில் உன்னதமான நிலைக்கு நாங்கள் நகர்த்திச் செல்கின்றோம்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது ஒரு சிறுவன் அல்லது சிறுமி உளவியல் ரீதியாகவும்,உடல் ரீதியாகவும பாதக்கப்படுகின்ற அனைத்து சம்பவங்களுமே சிறுவர் துஷ்பிரயோகம் என்ற கருத்துக்கள் கொண்டு வரப்படுகிறன. சிறுவர்கள் யார் என்று குறிப்பிடப்படுகின்ற போது இலங்கை நாடானது சிறுவர் சமவாயத்தின் அங்கத்துவ நாடாக காணப்படுகின்றது. அங்கத்துவ நாட்டின் பட்டயத்தின் படி 18 வயதுக்கு குறைந்த அனைவருமே சிறுவர்களாக கருதப்படுகின்றனர்.

இவ்வாறு சிறுவர்களாக கருதப்படுகின்ற இந்த நபர்களுக்கு உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஏற்படுகின்ற அனைத்து தாக்கங்களும் துஷ்பிரயோகமாகவே கருதப்படுகின்றது. அதிலும் விசேடமாக பாலி யல் துஷ்பிரயோகமானது வார்த்தைகளினாலும், செயற்பாடுகளினாலும் ஏற்படுகின்றது. சாதாரணமாக எங்களுக்கு அறிகையிடப்படுகின்றவழககுகளை பார்க்கின்ற போது பாலியல் துஷ்பிரயோகமானது மன்னார் மாவட்டத்தில் அதிக அளவில் காணப்படுகின்றது.

இதற்கான காரணமாக இன்றைய தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் தெனனிந்திய சினிமாக்களின் தாக்கமும் மிகவும் மோசமாக காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வரலாற்றை அவதானிக்கின்ற போது எங்களுடைய நீதிமன்றத்திற்கு வருகின்ற போது அவர்கள் பல தடவைகள் பாதிக்கப்பட்டுள்ளதை காண்கின்றோம். அவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் இருந்து வெளியேறாத சந்தர்ப்பத்தில் மட்டும் தான் நீதி மன்றத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர்.

இதனை நாங்கள் ஆரம்பத்திலேயே தடுப்போமாக இருந்தால் இச்சிறுவர்களின் எதிர்காலம் நல்லதொரு எதிர்காலமாக அமையும்.

துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களை பாதுகாப்பதற்கு பல சட்டங்கள் காணப்படு கின்றன.

பாலியல் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக பல இறுக்கமான சட்டங்களும் காணப்படுகின்றன. ஆனால் இறுக்கமான சட்டங்கள் காணப்படுகின்ற போதும் துஷ்பிரயோகம் நடந்து விட்டது என்றால் அங்கே சமூக மட்டங்களினூடான விழிப்புணர்வுகள் குறைவாக காணப்படுகின்றன.

சிறுவர்கள் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக நீதிமன்றத்தினூடாக சட்ட உதவி ஆணைக் குழு மற்றும் சமுதாய சீர்திருத்தத்தினூடாகவும் மேற்கொண்டு வருகின்றோம். அனை த்து விடயங்களுக்கும் மன்னார் பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிகள் உதவி செய்து வருகின்றனர். பல சிறுவர்கள் நீதிமன்றத்திற்கு வருகை தருகின்ற போது தமது விடயங்களை தனிமையில் கதைப்பதற்கும் விரும்புகின்றனர்.

அவர்களின் உள்ளத்தில் இருக்கின்ற வேதனைகளை வெளியில் கொண்டு வநது உளவளத்துறையினை வழங்குகின்ற போது பல சந்தர்ப்பங்களில் தமது துஷ்பிரயோகங்கள் தொடர்பாக தமது பெற்றோரிடம் அல்லது உறவினர்களிடம் தெரியப்படுத்துவார்கள்.

நாங்கள் நீதியினுடைய ஆலயமாகவே நாங்கள் நீதி மன்றத்தை கருதுகின்றோம். ஆகவே நீதியினுடைய ஆலயத்திற்கு வருவதற்கு யாரும் பயப்படத் தேவையில்லை.

உங்களுடைய தகவல்களை பொலிஸாருக்கு வழங்குவதற்கோ அல்லது நீதி மன்றத்திற்கு வழங்கு வதற்கோ அல்லது சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரி களுக்கு வழங்குவதற்கோ ஒரு போதும் அஞ்சக் கூடாது. அவ்வாறு தகவல்களை வழங்க தயக்கம் காட்டும் சந்தர்ப்பத்தில் எழுத்து மூலமாக, இரகசியமாக பொலிஸாரிடம் அல்லது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

உங்களது தகவல்கள் அனைத்தும் இரகசியமாக பாதுகாக்கப்படும்.சிறுவர் துஷ்பிரயோகங்களை சில நேரங்களில் தவறான முறையில் பயன்படுத்துகின்றமையை காணக்கூடியதாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 792

வின் ஜக்ஷன்




சிந்து




சர்மி சர்மிளா




ரகுதரன்

பிள்ளை வரம் கேட்டு
கோவில் கோயிலாக ஏறி
இறங்கும் யாருக்கும்
தெரிவதே இல்லை......
அம்மா வரம் கேட்டு அனாதை
இல்லத்தில் காத்திருக்கும்
குழந்தைகளின் கண்களில் ஏக்கம்....

பிரசன்னா




றொகான்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதயாத்திரைக்கு எதிராக 15 லட்சம் மக்களை திரட்டுவேன்

## வடிவேல் சுரேஸ் தெரிவிப்பு

*கூட்டு எதிர்க்கட்சியினால் முன்னெடுக்கப்படவுள்ள பாதயாத்திரைக்கு எதிராக 15 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை திரட்டி வீதியில் இறங்க தயார் என்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.*

குறித்த பாதயாததிரையானது இனவாதத்தை தூணடும் வகையில் அமையுமானால் எனது மக்கள் அதற்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தான் மக்களுடன் வீதிக்கு இறங்கினால் தம்முடன முஸலிம் மக்களையும் இணைத்துக் கொள்ளப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆட்சி பலத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாதத்தை தூண்டுபவர்களை மக்கள் வெறுப்பதாகவும், நாடாளுமன்ற உறுபபினர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-27.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.08 | 147.72 |
| பிரிட்டன் | பவுண்ட் | 188.31 | 194.71 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 157.37 | 163.38 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 144.23 | 150.03 |
| கனடா | டொலர் | 108.65 | 112.98 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.17 | 111.99 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.64 | 109.56 |
| இந்தியா | ரூபா | 2.1657 | ------- |
| சீனா | யுவான் | 21.8467 | -------- |

மத்திய கிழக்கு நாடு


| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.1950 |
| குவைத் | டினார் | 481.7704 |
| ஓமான் | ரியால் | 378.5665 |
| கட்டார் | ரியால் | 40.0236 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8646 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6804 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 90 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 85 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 500 | 400 |
| தக்காளி | 100 | 100 | 130 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 | 100 |
| கோவா | 160 | 100 | 140 | 140 | 150 |
| கரட் | 180 | 130 | 160 | 200 | 160 |
| பூசணி | 80 | 60 | 80 | 80 | 100 |
| புடோல் | 80 | 60 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 160 | 120 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 170 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | — | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 60 | 20 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 160 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 60 | 100 | 120 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 400 | 200 | 400 |
| போஞ்சி | 180 | 130 | 180 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 100 | 100 | 100 |
| கீரை-1பிடி | 20 | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 140 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 15-25 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 160 | 130 | 160 | 200 | 150 |
| முள்ளங்கி | 40 | 20 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 30 | — | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## அரசியல் பிரிவு தலைவர் தமிழ்ச்செல்வன் பலி! 237



### அமைதிப் பேச்சு வார்த்தை

போரில் ஏற்பட்ட காயங்களுக்குக் கடல் வழியாகச் வெளிநாடுகளுக்குச் சென்று சிகிச்சை பெற்று திரும்பிய தமிழ்ச்செல்வன் 1993ஆம் ஆண்டு தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் ஆனார். இறுதிவரை அந்த பொறுப்பில் அவர் நீடித்து வந்தார் 1994-1995இல் சந்திரிகா அரசுடனான அமைதி பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் அணிக்குத்தலைமை ஏற்றவர் தமிழ்ச்செல்வன்.

2002ஆம் ஆண்டு நோர்வே நாட்டு உதவியுடன் அமைக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுவில் அன்ரன் பாலசிங்கத்துடன் இடம்பெற்ற அவர் பின்னர் குழுவின் தலைமை பணியேற்றார். அமைதிப் பேச்சுவார்த்தைகளில் வெளிநாடுகளின் முதன்மை பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டு அரசின் உண்மை முகத்தை வெளிப்படுத்தினார்.

விடுதலைப்புலிகளின் தலைமை நிலையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தன்னுடைய அரசியல் பணிமூலம் மக்கள் மனதில் நிறைந்தவராகத் தமிழ்ச்செல்வன் விளங்கினார் என்றும் அதில் புகழாரம் சூட்டப்பட்டது.

### பா.நடேசன்

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவராக இருந்து வந்த சுப.தமிழ்ச்செல்வன் இராணுவம் நடத்திய விமான தாக்குதலில் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து அரசியல் பிரிவின் புதிய தலைவராக பா.நடேசனை அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் நியமித்தார்.

### பிரபாகரன் அஞ்சலி

வீரமரணம் அடைந்த தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட தளபதிகளின் உடலுக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மலர் அஞ்சலி செலுத்தினார்.

தமிழ்ச்செல்வனுக்கு, மறைவுக்கு உரியவிருதான பிரிகேடியர் விருதை வழங்கி பிரபாகரன் கௌரவித்தார்.

### பிரபாகரன் அறிக்கை

குண்டுவீச்சில் பலியான தமிழ்ச் செல்வனுக்கு இரங்கல் தெரிவித்து விடுதலைப்புலிகள் தலைரவர் பிரபாகரன் அறிக்கை வெளியிட்டார்.

அதில் அவர் கூறியதாவது,

தமிழ் உலகமே ஆழமாக நேசித்த ஒரு அரியல் தலைவனை சிங்கள தேசம் இன்று [illegible] இருக்கிறது. தமிழ் ஈழ மக்களின் மனங்களை வென்ற ஒரு தன்னிகரற்ற தலைவனைச் சிங்களம் பலி கொண்டிருக்கிறது.

எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல் துறை பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனையும் ஏனைய ஐந்து போராளிகளையும் இழந்து இன்று தமிழீழ தேசம் வரலாற்றில் என்றும் இல்லாத ஒரு பேரிழப்பை சந்தித்து இருக்கிறது. இந்த மாபெரும் சோக நிகழ்வு எம்மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது.

### அழகிய சிரிப்பும்.....

தமிழ்ச் செல்வன் எமது சுதந்திர இயக்கத்தில் இணைந்த காலத்தில் இருந்தே என்னோடு ஒன்றாக நெருக்கமாக வாழ்ந்தவன். நான் அவனை ஆழமாக அறிந்து ஆழமாகவே நேசித்தேன். எனது அன்புத் தம்பியாகவே வளர்த்தேன்.

அவனது அழகிய சிரிப்பும் அதனுள் புதைந்த ஆயிரம் அர்த்தங்களையும் அவனுள் அடர்ந்து கிடந்த ஆற்றல்களையும் ஆளுமையையும் நான் ஆரம்பத்தில் இருந்தே கண்டு கொண்டேன்.

### இலட்சிய நெருப்பு

இலட்சிய போராளியாக தலைசிறந்த தானைத் தளபதியாக, மாபெரும் அரசியல் பொறுப்பாளனாக அனைத்துலகோடும் உறவாடிய இராஜதந்திரியாக, பேராற்றல் மிக்க பேச்சுவார்த்தையாளனாக அவனை வளர்த் தெடுத்தேன்.

தான் நேசித்த மண் விடுதலை பெற வேண்டும். தான் நேசித்த மக்கள் சுதந்திரமாக கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்று சதா சிந்தித்தான்.

தான் நேசித்த அந்த மக்களது விடுதலைக்காக விடிவிற்காக தன்னையே ஊனாக உருக்கி உறுதியாக உழைத்த ஒரு இலட்சிய நெருப்பு அவன்.

### உறுதியோடு பயணிப்போம்

நீண்ட நெருப்பாக, நதியாக நகரும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு புதிய நெருப்பாக அவன் இணைந்து இருக்கிறான். இந்த இணைவிலே எமது கனத்த இதயங்களில் ஒரு பெரும் இலட்சிய நெருப்பை மூட்டியிருக்கிறான். எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றியிருக்கிறான். இந்த உறுதியில் உரம்பெற்று நாம் நமது இலட்சிய பாதையில் தொடர்ந்து உறுதியோடு பணிப்போம் இவ்வாறு அந்த அறிக்கையில் பிரபாகரன் கூறியிருந்தார்.

◆ ◆ ◆ ◆ ◆

கொழும்பு நகரில் விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையை சேர்ந்த பெண் மனித வெடி குண்டுகள் 28-11 -2007 அன்று 2 இடங்களில் தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு சம்பவத்தில் 16 பேர் பலியானார்கள். மேலும் 40 பேர் காயமடைந்தனர். மற்றொரு தாக்குதலில் தமிழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லதா? கெட்டதா? தெரியாது; ஆனால்

# மகிந்தவின் பாதயாத்திரைக்கு நாம் ஒத்துழைக்கமாட்டோம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவிப்பு

(கொழும்பு)



**மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினால் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாதயாத்திரையில் பங்கேற்கப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கூட்டு எதிர்க்கட்சியின் ஒழுங்கமைப்பில் முன்னெடுக்கப்பட உள்ள பாதயாத்திரைக்கு எமது ஒத்துழைப்பு கிடையாது.

கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரையில் பங்கேற்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும் நாம் அதில் பங்கேற்கப் போவதில்லை. பாதயாத்திரை நல்ல விடயமா? தீமையான விடயமா? என்பதனை என்னால் கூற முடியாது. எனினும் நாம் பாதயாத்திரையில் பங்கேற்கப் போவதில்லை என இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## இணையங்கள் பாதுகாப்புத் தலைவராக இராஜாங்க அமைச்சர் நிரோசன் நியமனம்



(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் இணையங்கள் பாதுகாப்பு தொடர்பான தலைமைப் பதவி இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேராவிற்கு கிடைத்துள்ளது.

இணையங்கள் ஊடாக இடம்பெறும் மோசடிகள், குற்றங்கள் மற்றும் இணையங்களின் பாதுகாப்பு தொடர்பில் அவுஸ்திரேலியாவில் கடந்த வாரம் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர்கள் விஜித ஹேரத, மலிக் ஜயதிலக உள்ளிட்டவர்கள் அவுஸ்திரேலியா சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை; தமிழக சட்டசபையில் அமளி

இலங்கைத் தமிழர் பிரச்சினை, விவகாரத்தால் இந்திய சட்டப்பேரவையில் அமளி ஏற்பட்டது. அமளியில் ஈடுபட்ட தி.மு.கவினருக்கு சபாநாயகர் தனபால் கடும் எச்சரிக்கை விடுத்தார்.'

தமிழக சட்டசபையில் கடந்த வாரம் 2016-17 ஆம் ஆண்டுக்கான திருத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த பட்ஜெட் மீதான விவாதம் நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக நடைபெற்றது.

தமிழக சட்டசபையில், பட்ஜெட் மீதான பொது விவாதத்தின்போது பேசிய அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஓ.கே.சின்ராஜ், இலங்கை இறுதிக்கட்ட போரின்போது அப்போதைய தி.மு.க. அரசு எதுவும் செய்யவில்லை என குற்றஞ் சாட்டினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.கவினர் முழக்கமிட்டதால் அவையில் அமளி நிலவியது.

தி.மு.க. உறுப்பினர்கள் பேரவை விதிகளை மதிப்பதில்லை என கண்டனம் தெரிவித்த சபாநாயகர் தனபால், விதிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தினார். (இ-7-10)

## வைத்தியர்களின் கொடுப்பனவுகள், ஓய்வூதியம் அதிகரிக்கப்படும்

### சுகாதார அமைச்சர் தகவல்



வைத்தியர்களின் கொடுப்பனவுகள், ஓய்வூதியங்கள் என்பன அதிகரிக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த வாரமளவில் வைத்தியர்களுக்கான வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது வைத்தியர்களுக்கான அனைத்து வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தொழிற்சங்க உரிமைகளை பெறுவதற்கான ஆயுதம் பேச்சுவார்த்தையே அன்றி வேலை நிறுத்தப் போராட்டம் அல்ல வென்றும் தெரிவித்தார்.

அத்துடன் தொழிற்சங்க அமைப்புகளுடன் கலந்துரையாடி அவர்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுக்க தயாராக விருப்பதாகவும் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## செய்தித்துளிகள்

### யானை தாக்கி சிறுமி பலி!

வெல்லவாய பகுதியில் யானை தாக்கி பாடசாலை சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதுடன் குறித்த சிறுமி தன் தாத்தாவுடன் பாடசாலைக்குச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த சிறுமி 9 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமியின் தாத்தா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7-10)

### விடுதலைப்புலி ஆதரவாளர்கள் தொடர்பில் விழிப்பு அவசியம்

விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் படையினர் விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல், மிலிந்த பீரிஸ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாக இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7-10)

### வற் வரி திருத்தம் குறித்து 11 ஆம் திகதி விவாதம்

வற் வரி திருத்தம் குறித்த இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாடாளுமன்றில் ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி விவாதம் செய்யப்படவுள்ளது. முற்பகல் 11.30 மணி முதல் மாலை 6.30 வரையில் விவாதம் நடத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற பேச்சாளர் ஒருவர் தெரிவித் துள்ளார். இந்த உத்தேச சட்டமூலம் இதற்கு முன்னர் ஓர் நாளில் விவாதம் செய்யப்படவிருந்தது. நாடாளுமன்றில் இந்த உத்தேச சட்டமூலம் விவாதத்திற்க எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டதன் பின்னர், வற் மீளவும் அமுல்படுத்தப்படவுள்ளது. வற் வரி உயர்விற்கு உச்ச நீதிமன்றம் தற்போது இடைக் கால தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### ஆட்டோக்களால் ரூ.600 கோடி மோசடி செய்யத்திட்டம்

மேல்மாகாணங்களில் உள்ள ஆட்டோக்களை பதிவு செய்வதன் மூலம் 600 கோடி ரூபாயினை மோசடி செய்வதற்கு வீதி போக்குவரத்து அதிகார சபை திட்டமிட்டுள்ளதாக சுயதொழில் வேலைவாய்ப்பு தொழிற்சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும் ஆட்டோக்களின் பதிவுகளுக காக இதுவரை 100 ரூபாய் அறவிடப்பட்டு வந்ததாகவும். ஆனால் தற்போது பதிவுக்கட்டணம் 350 ரூபாயிலிருந்து 1750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன தெரிவித்துள்ளார். (இ-7-10)

### வைத்தியசாலையின் கட்டடப் பகுதி இடிந்து விழும் நிலையிலுள்ளது

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உள்ள சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலக மேல்தட்டு (பிளாட்) இடிந்து விழும் நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் அலுவலகத்தின் மேல்தட்டு (பிளாட்) ஜன்னலின் மேற்பகுதி என்பன பெரும் வெடிப்பு ஏற்பட்டு விழக்கூடிய நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-5-60)

### மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம்

பண்டத்தரிப்பு மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மார்க்கண்டு சுவாமிகள் சபையின் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கு.சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந் தினராக மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலய ஆசிரியர் பா.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கவுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியக் கடற்கரையில் 87 சடலங்கள் மீட்பு

*லிபியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் சென்ற 87 அகதிகளின் சடலங்கள் லிபியக் கடற்கரையில் ஒதுங்கியுள்ளன.*

தலைநகர் திரிபோலிக்கு வடக்கே உள்ள சபரதா கடற்கரையிலிருந்து 87 சடலங்களை சிறப்பு மீட புக் குழுவினர் மீட்டுள்ளனர்.

5 அல்லது 6 நாட்களுக்கு முன் ஏற்பட்ட விபததில், கடலில் மூழ்கிய அகதிகளின் சடலங்கள் எனவும்கடந்தசனிக்கிழமை 41 சடலங்களும் ஏனைய சடலங்கள் ஞாயிற்றுக் கிழமையும் கரையொதுங்கியுள்ளன . (இ-7-10)



## நெதர்லாந்தில் தான் உயரமான ஆண்கள்

நெதர்லாந்து நாட்டு ஆண்கள மற்றும் லதவியா நாட்டு பெணகளே உலகில் உயரமானவர்களென்று புதிய ஆய்வு ஒன்றில கண்டறியப்பட்டுள்ளது.


இதேவேளை குவாத்த மாலா நாட்டுபெண்களும் கிழக்குதீமோர நாட்டு ஆண்களும் தான் உலகிலேயே குள்ளமானவர்கள் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

மனிதர்களின் உயரங்களில், மரபியல் தாக்கங்களால் சில மாற்றங்கள் ஏறபடலாம். எனினும் நல்ல சத்துாடடம், சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன என லண்டன் இம்பிரியல் கல்லூரியின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்கத்தேய சமூகங்களில் மனிதர்கள் உயரமாக வளர்வது சராசரியாக உள்ளது. மேலும்ஆபிரிக்காவின சில இடங்களில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் கண்ட வளர்ச்சி குறைந்துள்ளது எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகின் உயரமானவரகளாக கருதப்படும் நெதர்லாந்து நாடடவரின் சராசரி உயரம் 183 செ.மீ. மற்றும் லத்வியா பெண்களின் உயரம்170 செ. மீ உலகில் குள்ளமானவர்களாக கருதப்படும் குவாத்தமாலா பெண்கள 150 செ. மீற்றர் உயரத்தை எட்டு வது அரிது எனவும் மேலும் கிழக்கு தீமோர ஆண்களின் சராசரி உயரம் 160 செ.மீற்றர் ஆகும் எனவும் தெரிவிககப்பட்டுள்ளது. (இ-7-10)

## ஸ்பெயின் நாட்டில் முதலாவது ஷிகா வைரஸ் தொற்று பதிவு



ஸ் பெயின் நாட்டில் முதல் முறையாக ஷிகா வைரஸினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர், மூளை வளர்ச்சி குறைபாடுடைய குழந்தை ஒன்றை பெற்றெடுததுள்ளார். ஐரோப்பாவில் பதியப்பட்டுள்ள முதலாவது ஷிகாவைரஸ் தொற்று இதுவே ஆகும் என குறிப்பிடப்படுகின்றது.

கடந்த மே மாதம், குறித்த தாய் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, அவரது வயிற்றில் வளர்ந்து வரும் சிசுவுக்கு ஷிகாவைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இருப்பினும் குறித்த தாய் மற்றும் அவரது கணவன் அந்த குழந்தையை பெற்றெடுக்கவே விரும்பியுள்ளனர். சுமார் 40 வாரங்கள் கருவுற்றிருந்த அந்த தாய்ககு, சிசேரியன் அறுவை சிகிச்சை செய்தே குழந்தை வெளியே எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த பார்சிலோனா வைத்திய சாலையின் வைத்தியர், "பாதிக்கப்பட்டுள்ள குழந்தையை நாங்கள் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றோம். குழந்தையின் பெற்றோர் மகிழ்ச்சியாகவேயுள்ளனர்" என தெரிவித்தார். (இ-7-10)

## மாயமான விமானத்தை கண்டுபிடிப்பதில் சிக்கல்

இந்தியாவின் செனனையிலிருந்து கடந்த 22ஆம் திகதி மாயமான விமானத்தை கண்டுபிடிப்பதில் உள்ள சிக்கல்களை இராணுவத் தளபதி ஜக்பீர் சிங் எடுத்துக் கூறியுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 26 ஆம் திகதி 'கார்கில்' வெற்றித்தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சென்னை தீவுத்திடல் அருகேயுள்ள போர் நினைவு சின்னத்தில் 17 ஆவது கார்கில் வெற்றித்தினம கொண்டாடப்பட்டது.

இதில் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள், கார்கில் போரில் உயிர் நீத்தவர்களின் குடும்பத்தினர் உட்பட ஏராளமானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

இதன்பின்னர் இராணுவ தளபதி ஜக்பீர் சிங் கூறுகையில், நாட்டின் முப்படைகளும் மாயமான விமானத்தை தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. மிகப்பெரிய கடல்பரப்பு முழுவதையும் சோதனை செய்வது கடினமான ஒன்று. எனவேதான் விமானத்தை கண்டுபிடிப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

கடலின் ஆழத்திற்கு ஏறறவாறு தொழில்நுட்ப உதவியுடன் விமானத்தை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் சில நாட்களில் கண்டுபிடித்து விடுவோம் என தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய இராணுவத்தின் தென் பிராந்திய பகுதிகள் மிகவும் பலமாக உள்ளதாகவும் எந்த தாக்குதலையும சமாளிக்கும் வகையில் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7-10)



# தமிழ் சினிமா வரலாறு

## காங்கிரசை விட்டு விலகி சிவாஜிகணேசன் தனிக்கட்சி

**218**

என் தம்பி சிவாஜியை என் சார்பாக நீ வாழ்த்து என்றார்.

அந்த அளவுக்கு சிவாஜி மீது எம்.ஜி.ஆர்.அன்பு வைத்து இருக்கிறார்.

இவ்வாறு பாரதிராஜா பேசினார்.

**நடிப்புக்கு வாத்தியார்**

இறுதியாக பாராட்டுக்கு நன்றி தெரிவித்து சிவாஜி கணேசன் பேசினார்.

அவர் கூறியதாவது,

எனக்கு நடிப்புலக குரு யாரும் இல்லை என்று இங்கே சிலர் பேசினார்கள். பெரியவர் எல்.வி.பிரசாத் என் நடிப்புக்கு வாத்தியார். கமரா முன்பு நின்று நடிப்பது எப்படி என்பதையே எனக்கு கற்றுத்தந்தவர் அவர். டைரக்டர் கிருஷ்ணன் (பஞ்சு) இங்கே என்னை வாழ்த்த வந்திருப்பது நான் செய்த பாக்கியம்.

இவ்வாறு கூறிவிட்டு டைரக்டர் கிருஷ்ணனுக்கு சிவாஜி கணேசன் பொன்னாடை போர்த்தினார்.

விழாவில் சிவாஜிகணேசன், மனைவி கமலா அம்மாள், மகன் ராம்குமார், அண்ணன் வி. சி. தங்கவேலு ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

காங்கிரஸ் கட்சியில் இருந்த சிவாஜிகணேசன், காமராஜர் மறைவுக்குப்பின் தனிக்கட்சி தொடங்கினார். காமராஜர் 1975 ஒக்டோபர் 2ஆம் திகதி (காந்தி பிறந்த நாள்) மரணம் அடைந்தார்.

இதற்கு முன்னைய தினம் நாள் சிவாஜி கணேசன் பிறந்த நாள். சிவாஜியின் வீட்டுக்குக் காமராஜர் சென்று மாலை அணிவித்து வாழ்த்தினார்.

**மரணம்**

மறுநாள் பிற்பகல் காமராஜர் திடீரென்று மரணம் அடைந்தார். அப்போதும் பாட்டும் பரதமும் படப்பிடிப்பில் சிவாஜி நடித்துக் கொண்டிருந்தார். காமராஜர் மறைந்து விட்டார் என்று திடீரென்று அவரிடம் சென்னால் மிகுந்த அதிர்ச்சி அடைவார் என்று கருதி காமராஜருக்கு உடல் நலம் இல்லை என்று மட்டும் சொன்னார்கள்.

உடனே சிவாஜிகணேசன் படப்பிடிப்பை நிறுத்தி விட்டு காமராஜர் வீட்டுக்கு விரைந்தார். காமராஜர் வீட்டை நெருங்கும் போதுதான் அவர் இறந்து போன தகவல் சிவாஜிக்கு தெரிவிக்கப் பட்டது. சிவாஜி கதறி விட்டு அழுதார்.

காமராஜர் மறைவு பற்றி சிவாஜி பின்னர் குறிப்பிடும் போது என்னை வளர்த்து ஆளாக்கிய என் தாயைப் பிரிந்து துயரத்தால் துடித்தது



போல என் தலைவர் காமராஜர் அவர்கள் இறந்த பொழுதும் தாங்க முடியாத துன்பத்தில் ஆழ்ந்தேன் என்று கூறியுள்ளார்.

காமராஜர் மறைவுக்குப் பின் காங்கிரஸை விட்டு விலக நேர்ந்தது பற்றி அவர் கூறியிருந்ததாவது, காமராஜருக்குப் பிறகு அவர் விட்டுச் சென்ற பணிகளை யாரும் சரியாகச் செய்யவில்லை.

**இந்திரா அழைப்பு**

காமராஜரிடம் நல்ல தொண்டர்கள் இருந்தார்கள். நன்றாக வேலை செய்பவர்கள இருந்தார்கள். காமராஜர் இறந்த பிறகு அவர்களை எல்லாம் தன் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்திரா காந்தி எண்ணினார். அதனால் பல பேர் அவர் கட்சியில் சேர்ந்து விட்டார்கள்.

முதலில் நான் சேரவில்லை. இந்திரா காந்தியுடன் சேர்ந்த சிலர் என்னிடம் வந்து நீங்கள் இ.காங்கிரசில் சேர வேண்டும் என்றார்கள். அந்த சமயத்தில் நான் காலில் அடிபட்டு வைத்திய சாலையில் படுத்துக் கிடந்தேன்.

அதன் பின் நானே இந்திரா காந்தியிடம் சென்றேன். அவர் என்னிடம் காமரா ஜர் இறந்து விட்டார். நீங்கள் தனியாக இருந்தால் என்ன செய்ய முடியும்? நான் பிரதமராக இருக்கிறேன். காமராஜர் என்னென்ன விட்டுச் சென்றாரோ அவற்றை எல்லாம் சொல்லுங்கள். நான் செய்து கொடுக்கிறேன் என்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மகிழ்ச்சி நாணயமான வாழ்க்கையில் இருக்கிறது.

- நடிகர் ரஜினிகாந்த்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நல்லாட்சியின் பயனை தமிழ் மக்கள் அனுபவிக்க...

நல்லாட்சியின் பயனை தமிழ் மக்கள் பெற்றுக் கொண்டனரா என்றால் எதுவும் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

எதுவும் இல்லாத அசைவற்ற நிலைமையை எவரும் ஒரு நல்ல சூழ்நிலை என்று சொல்லவில்லை. ஏனெனில் அசைவற்ற நிலைமையானது மதில் மேல் பூனை போன்றது.

அந்தப்பக்கமா? இந்தப்பக்கமா? என்று தெரியாத ஒரு கட்டம். எனவே எதுவும் அற்றவை ஒரு தற்காலிக அமைதி என்று சொல்லலாமே அன்றி அதுவே உயர்ந்த நிலைமை என்று சொல்லிவிட முடியாது.

ஆக நல்லாட்சி என்பது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும். இதற்கு மேலாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் எழுகைக்கான உதவிகள் வழிகாட்டல்கள் என்பன தாராளமாக நடந்தாக வேண்டும்.

இருந்தும் இது எதுவும் நடப்பதாக தெரியவில்லை. ஒரு பெரும் போரை நடத்திய அரசை தேர்தலில் தோற்கடித்து சில கட்டமைப்பு மாற்றங்களை செய்யும்வரைக்கும் பொறுமை அவசியம் என யாரேனும் கூறுவார்களாயின் அதனை அடியோடு நிராகரிப்பதற்கு நாம் தயாரில்லை.

இருந்தும் கட்டமைப்பு மாற்றங்களை செய்வது என்பது அதிரடியாக மேற்கொள்ள வேண்டியது. இது விடயத்தில் எடுக்கும் கால தாமதம் வேறுவிதமான சூழ்நிலையை தோற்றுவித்து விடலாம்.

இத்தகைய சூழல் மாற்றம் என்பது முன்னைய அரசின் குழப்பங்களை மட்டும் குறிப்பிடுவதாக அமையாது. மாறாக நல்லாட்சிக்குள் இருக்கக் கூடிய இனவாதிகள் பொறுப்பான பதவிகளில் இருப்பார்களாயின் அமைதியான இச் சூழலை பயன்படுத்தி தங்களின் ஆதிக்கத்தை அமுல்படுத்த தலைப்படுவர் என்பதுங் இங்கு கவனிக்கத்தக்கது.

இப்போது நல்லாட்சியிலிருக்கக் கூடிய அமைச்சர்கள் சிலர் தத்தம் இன நலனை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படுவதை காண முடிகின்றது.

இத்தகைய போக்கு தமிழ் மக்களுக்கு பாதகமாக அமையும் என்பது நிறுத்திட்டமான உண்மை. அன்மைக்காலத்தில் சில அமைச்சர்கள் எழுந்தமானமாக செயற்படுவதை காண முடிகின்றது.

நல்லாட்சி – போருக்கு பின்பான அமைதி என்பவற்றை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பு செய்வது, தமது இன மக்களை அத்துமீறி குடியமர்த்துவது, தமது இனம் சார்ந்தவர்களின் நலனுக்காக மட்டும் செயற்றிட்டங்களை வகுப்பது, தமிழ் இனத்தை அவர்களின் மாகாண அரசை புறம்தள்ளுவது என்ற நயவஞ்சகத் தனம் எழுந்து ஆடுவதை காணமுடிகிறது.

இத்தகைய நிலைமைகள் நல்லாட்சியை விட முன்னைய ஆட்சி பரவாயில்லை என்றதான சிந்தனையை ஏற்படுத்திவிடும்.

அதாவது முன்னைய ஆட்சியில் இப்போது அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் எல்லை மீறி ஆட முடியாது. அவ்வாறு ஆடினால் கதிரையால் அடி வாங்கப்படும் நிலைமையும் ஏற்பட்டிருக்கும்.

அந்தளவிற்கு முன்னைய ஆட்சியில் முழு அதிகாரமும் ஒருவரிடம் அல்லது ஒரு குடும்ப உறுப்பினர்களிடம் இருந்தது.

ஆனால் நல்லாட்சியில் அதிகாரங்கள் வல்லவர்களால் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருக்கின்றது. இந்த நிலைமை அடியோடு மாற்றப்பட வேண்டும். இதை மாற்றுவதாக இருந்தால் இதற்கான ஒரே வழி தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது. போர்ப் பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களின் புனரமைப்புப் பணிகளை தமிழர் சார்ந்த செயலணி கவனிப்பதென்பதாக நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அப்போது தான் நல்லாட்சியின் பயனை தமிழ் மக்கள் அனுபவிக்க முடியும்.

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்.வடமராட்சி வலயத்தின் பின்வரும் பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை- தரம் II, யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் – தரம் II, யா/ அல்வாய் அம்பாள் வித்தியாலயம் - தரம் II, யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் - தரம் III, யா/ தாளையடி றோ.க.த.க. பாடசாலை - தரம் III ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கீழ்வரும் தகைமையுடைய அதிபர், ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தரம் II பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் – II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தரம் –III பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் III அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தங்கள் அதிபர் தரத்திற்கு பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 6 பொருத்தமாகாது)

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலைகளில் ஆகக்குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

உரிய தரத்தையுடையவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் மாத்திரம் ஏனைய தரத்தைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 08.08.2016.

விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்விற்கு தோற்றுதல் வேண்டும். தேவையேற்படின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார். (இ)

# பக்திப் பாமாலை

நல்லூர் கந்தசுவாமி ஆலயம் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வருகின்ற ஆன்மிக நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்வில் சிறுப்பிட்டியூர் சத்தியதாஸ் வில்லிசைக்குழு வழங்கும் பக்திப் பாமாலை நிகழ்வு மாலை 5 மணியளவில் இடம்பெறும்.

இந்நிகழ்வு பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறும். (இ-5)

# தொண்டராசிரியர்கள் கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தொண்டராசிரியர்களின் அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலில தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமணங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதனால் வடக்கை சேர்ந்த அனைத்து மாவட்ட தொண்டராசிரியர்களையும் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண தொண்டராசிரியர்களின் தலைவர் இ.ஜெயராஜ் கேட்டுக் கொண்டுள்ளார். (செ-4)

# 2016 ஆம் ஆண்டில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு முன்சேவைப் பயிற்சி

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இவ் வருடத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம், கணக்கியல், பொருளியல், புவியியல், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்காக 526 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான ஆசிரிய முன்சேவைப் பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டம் ஓகஸ்ட் மாதத்திலும் இரண்டாம் கட்டம் டிசெம்பர் மாதத்திலும் நடத்தப்படும். கணிதம், விஞ்ஞானம், புவியியல் பாட ஆசிரியர்களுக்கான முதல் கட்டப் பயிற்சி நாளை மறுதினம் 30 ஆம் திகதி வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறும்.

ஏனைய பாடத்துறைகளான தமிழ், சிங்களம், ஆங்கிலம், கணக்கியல், பொருளியல் பாட ஆசிரியர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி அதே இடத்தில் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

இவ் ஆசிரியர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாத ஆசிரியர்களும் உரிய பயிற்சிகள் ஆரம்பமாகும் திகதியில் பிரசன்னமாகித் தமது பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிகள் ஆரம்பமாகும் திகதியில் பிரசன்னமாகித் தமது பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிகளில் பங்கு பற்ற முடியும். இப்பயிற்சி ஆசிரிய சேவையில் மிக முக்கியமான ஓர் பயிற்சி என வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார். (இ)

# சத்திய தரிசனம்



## நான்கு கட்டளைகள்

❖ கடவுளை உணர கஷ்டங்களையும், துன்பங்களையும் முழு மனதோடு வரவேற்க வேண்டும். இறைவனின் நாமத்திலும் ரூபத்திலும் தொடர்ந்து நம்பிக்கையோடு லயிக்க வேண்டும். தரக்குறைவான வழிகளினால் கிடைக்கும் அற்ப சந்தோஷங்களை அறவே விட்டொழியுங்கள். கடவுளை உங்கள் வழிகாட்டும் ஒளியாகக் கொள்ளுங்கள். அப்படியென்றால் வாழ்க்கையை பத்திரமாகக் கடக்கலாம். கடவுளின் நாமம் எப்போதும் உங்கள் நாவில் தவழட்டும். அவர் அந்த நாமத்திற்கு ஏற்ற ரூபமாகக் கட்டுப்பட்டவர். இன்றிலிருந்து "நாமஸ்மரணை" என்கிற "சாதனா" செய்வதாக உறுதி பூணுங்கள். இறைவனின் தெய்வீகப் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரியுங்கள்.

❖ செல்வம் நில்லாது என்று தெரியும். இருந்தாலும் அதற்காக ஏங்குகிறான் மனிதன். ஒருவரிடம் நம்பிக்கை வைத்து ஒன்றை எதிர்பார்த்து, அது கிடைக்கவில்லையென்றால் வெறுப்பை வளர்த்துக் கொள்கிறான். மனிதனிடம் மட்டுமல்ல, பிரார்த்தனைகள் நிறைவேறாதபோது, கடவுளுக்கு எதிராகவும் மனிதன் வெறுப்பை வளர்த்துக் கொள்கிறான். இத்தகைய துன்பங்களும் அமைதியின்மையும் மனிதனுக்கு பேரிழப்பை ஏற்படுத்துகின்றன. அவன் தனது இயல்பான தன்மையை மறக்கிறான். மகிழ்ச்சிக்கும், துக்கத்துக்கும் உலக நடப்புகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் மனமே காரணமே தவிர இயற்கையல்ல.

❖ இளைஞர்கள் தமக்குள் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள நான்கு செயல்கள் புரிய வேண்டும். 1. தீயவர் கூட்டத்திலிருந்து விலகியோடி விடுதல். 2. நல்லோரின் கூட்டுறவை நாடுதல். 3. மற்றவர்களுக்குப் பயனுள்ள வகையில் நேரத்தைச் செலவிடுதல். 4. எல்லா நேரங்களிலும் இறைவனது நாமத்தை தியானித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத யாத்திரைக்கான முதல் கூட்டம் வைத்தியசாலையில் இடம் பெற்றது

## நாமல் எம்.பி. தெரிவிப்பு

பாதயாத்திரைக்கான முதலாவது கூட்டம் வைத்தியசாலையில் வைத்தே இடம் பெற்றுள்ளதாக நாமல் ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த பாதயாத்திரை எதற்காக என்றும் நாமல் அதில் தெரிவித்துள்ளார்.

மேலும், "இந்த பாதயாத்திரை நிகழ்வானது இரண்டு மாதங்களுக்கு முன்னிலிருந்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் நான் வைத்தியசாலையில் இருந்த போதே இது தொடர்பில் முதலாவதாக கூட்டு எதிர்கட்சியுடன் கலந்தாலோசித்தேன். நான் சிகிச்சையுடனேயே கூட்டத்திலும் கலந்து கொண்டேன். 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆட்சிக்கு எதிரான கூட்டங்களை நடத்தியுள்ளோம். நாம் பணம் கொடுத்து மக்களை திரட்டியுள்ளோம் என்று கூறப்படும் கருத்துகள் முற்றிலும் பொய்யானது. பொதுமக்கள் வீட்டிலிருந்து உணவு எடுத்துக்கொண்டே இந்த பாதயாத்திரையில கலந்து கொண்டுள்ளனர்.

நாம் கொழும்பிலிருந்து கதிர்காமம் வரையில் சென்ற பாதயாத்திரை போலல்ல இது. நல்லாட்சிக்கு எதிராக நாம் நடத்தும் மிகச்சிறிய போராட்டமே.

இது நிறைவடைந்ததும் மிகப்பெரியளவிலான எதிர்ப்புகளை நல்லாட்சி சந்திக்க ஆயத்தமாக வேண்டும்." எனவும் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார். (இ-7.10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ. பிரதேசத்தில் கதிரிப்பாய், தும்பளை, இடைக்காடு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சிப் பிரதேசததில ஆனந்தபுரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும் மத்திய வங்கி SFHQ , இரணைமடு Mas Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாய பீடம் North Gargill's Agri foods, 7 ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டெட், கொக்காவில் இராணுவ படைமுகாம் I, II, III, ரூபவாஹினி தொலைத் தொடர்கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத் தொடர்பு கோபுரம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோவில் ஆகிய பிரதேச ங்களில் மின் தடைப்படும். (இ-9)

# மட்டுவில் வளர்மதி வி.கழக மென்பந்து சுற்றுத் தொடர்



கொக்குவில் பிரம்படி சம்பியன்

City Sports ஐ ஒரு ஓட்டத்தால் வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது கொக்குவில் பிரம்படி விளை யாட்டுக்கழகம்.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தியு கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இப்போட்டியில் கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து City Sports மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பிரம்படி வி.க. முதலில் துடுப் பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய பிரம்படி வி.க. நிர்ணயிக்கப் பட்ட 8 ஓவர்களில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது. பவி 08 ஓட்டங்களையும் கஜன் 09 ஓட்டங்களை யும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் டெஸ்மன் சூரி, பிரணவன் தலா இர ண்டு இலக்குகளை வீழ்த்தினர் .39 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு துடுப் பெடுத் தாடிய City Sports 7.2 ஓவர்களில் சகல இலக்குக ளையும் இழந்து 37 ஓட்டங் களைப் பெற்றது. மது 11 ஓட் டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அயன் 04 இலக்கு களை வீழ்த்தினார். அதன்படி ஒருஓட்டத்தால்வெற்றி பெற்றது பிரம்படி வி.க. ஆட்டநாயக னாக அயனும் சிறந்த துடுப் பாட்டவீரனாக செல்டனும் தொட ராட்ட வீரனாக டெஸ்மனும் தெரிவானார்கள். (க)

# அராலி திருமகள் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## றோயல் வெற்றி



அராலி திருமகள் விளை யாட்டுக்கழகம் நடத்துகின்ற உதைபந்தாட்டத் தொடரின் அண்மையில் நடந்த சுப்பர் 8 போட்டியில் ஊரெழு றோயல் அணி காளிகாம்பாள் அணி யுடன் மோதியது.இந்த ஆட்ட த்தில் றோயல் அணியின் முன்கள வீரர் சஜந்தனின் அதிரடி ஆட்டத்தினால் 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.றோயல் அணி சார் பில் சஜந்தன் ஹட்ரிக் கோல் 3,நிதர்சன் 1 கோல்களை அடித்தனர். (க)

# பருத்தித்துறை வீனஸ் அணி சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி

குரும்பைகட்டி உதய சூரியன் வி.கழகத்தால் நடத்த ப்பட்ட வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான கிரிக்கெட் சுற் றுப்போட்டிகளில் கடந்த சனிக் கிழமை புலோலி இளைஞர் வி.க.மைதானத்தில் நடை பெ ற்றபோட்டியில் வீனஸ் அணியை எதிர்த்து நெல்லை பிளாஸ்ரர் வி.க. மோதியது.

முதலில் துடுப்பெடுத்தா டிய வீனஸ் வி.கழகம் 10 ஓவர் நிறைவில் 7 விக்கெட் இழ ப்புக்கு 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிறோ 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 48, சின்ராஸ் 19 ஓட்டங்க ளைப் பெற்றனர். பதிலுக்கு ஆடிய நெல்லை பிளாஸ்ரர் அணி 10 ஓவர் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

30 ஓட்டங்களால் வெற்றி பெற்ற பருத்தித்துறை வீனஸ் அணி சுப்பர் 8 சுற்றுக்கு நடைபெற்றது. (க)

# இன்றைய போட்டிகள்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அமரர் நல்லையா சதீஸ்குமாரின் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மட்டுவில் ஞானதீபம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடகம்பரை அம்பாள் விளையாட்டுக்கழகமும் இரவு 8.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக்கழத்தை எதிர்த்து புத்தூர் சோமஸ் கந்தன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று மாலை 4.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)



ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் அண்மையில் நடத்திய மென்பந்து சுற்றுப் போட்டியில் முரசொலி அணி Champion பட்டத்தை வென்றது. அதற்கான வெற்றிக்கிண்ணம் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தால் புதிதாக அமைக்கப்பட்ட மைதானத்தில் வழங்கப்பட்டதை படங்களில் காணலாம்.

# வடக்கு மாகாண தடகளப்போட்டி தெல்லிப்பழை மகாஜன சாதனை



வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான தடக ளப் போட்டி கடந்த வாரம் துரையப்பா விளையாட்டர ங்கில் நடைபெற்றது.

இதில் பங்கு பற்றிய தெல் லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் 11 தங்கப் பதக் கம், 10 வெள்ளிப் பதக்கம், 4 வெண்கலப் பதக்கத்தோடு 4 புதிய சாதனை படைத்து சிற ந்த பெறுபேற்றினை வெளிப் படுத்தியுள்ளது.

15 வயதுப் பெண்கள் பிரி வில் ச.தீபிகா 100 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் புதிய சாதனை படைத்ததோடு தங் கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

15 வயதுப் பெண்கள்

ச.தீபிகா -100 மீற்றர் சட்ட வேலி(முதலாமிடம்,புதியசாதனை), உயரம் பாய்தல் (மூன்றா மிடம்), சி.தேனுஜா -குண்டு போடுதல் (இரண்டாமிடம்)

15 வயது ஆண்கள்

த.தனுசன்- ஈட்டி எறிதல் (முதலாமிடம்), சி.யாம்சன் - 100 மீற்றர் சட்டவேலி (இர ண்டாமிடம்), சி.சதுஜன் - 100, 200 (இரண்டாமிடம்), அஞ் சல் ஓட்டம் -4X100 (மூன் றாமிடம்), 4X400 (முதலா மிடம்)

17 வயது ஆண்கள்

சி. கபில்சன் - 100 மீற்றர் (இரண்டாமிடம்), 200 மீற்றர் (முதலாமிடம்)

17 வயதுப் பெண்கள்

ச.ஹெறினா - உயரம் பாய் தல் (இரண்டாமிடம்), கோலூ ன்றிப் பாய்தல் (முதலாமி டம்), ப.சானு-ஈட்டி எறிதல் (மூன்றாமிடம்)

19 வயது ஆண்கள்

சி.டிலக்சன் -கோலூன் றிப் பாய்தல் (முதலாமிடம் - புதிய சாதனை), வ.யக்சன் - 110 மீற்றர் சட்டவேலி (இரண் டாமிடம்), உ.சுயூசாந் - தட்டெ றிதல் (மூன்றாமிடம்)

19 வயதுப் பெண்கள்

சி.டிலானி -கோலூன்றிப் பாய்தல் (இரண்டாமிடம்), இ.அப ர்ணா -முப்பாய்ச்சல் (இரண் டாமிடம்), அஞ்சல் ஓட்டம் - 4X100 (இரண்டாமிடம்)

21 வயதுப் பெண்கள்

ஜெ.அனித்தா- கோலூ ன்றிப் பாய்தல் (முதலாமிடம்- புதிய சாதனை), 100 மீற்றர் சட்டவேலி (முதலாமிடம்- புதியசாதனை), ஈட்டி எறிதல் (முத லாமிடம்), அஞ்சல் ஓட்டம் - 4X100 (முதலாமிடம்), 4X400 (முதலாமிடம்). (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்புணர்வுக்கு உட்படுத்த முற்பட்டவேளை

# மருமகனின் கீழ் உதட்டை கடித்து துண்டாடிய மாமியார்!

(கொழும்பு)

மாமியரை வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற போது தனது கீழ் உதட்டின் ஒருபகுதியை இழந்த மருமகனை, கிரிந்திவெலப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 44 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவி வெளிநாட்டில் தொழில் புரிந்து வரும் நிலையில், தனது மகளைப் பராமரிப்புக்காக, மாமியாரின் வீட்டில் தங்க வைத்துள்ள பிரஸ்தாப நபர், மகள் பிரத்தியேக வகுப்புகளுக்காகச் சென்றிருக்கும் போது, வீட்டில் தனிமையில் இருநத மாமியாரை இவ்வாறு வன்புணர்வுக்குட்படுத்த முயற்சித்துள்ளார். எனினும், அவரிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, மருமகனின் கீழ் உதட்டின் ஒரு பகுதியை கடித்து துண்டாக்கி விட்டு அவரிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர் தனது கடைசி மகளின் வீட்டுக்குப் பாதுகாப்புக்காகச் சென்ற மாமியார், கிரிந்திவெலப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யும் போது சந்தேக நபரின் கீழ் உதட்டின் ஒரு பகுதியைக் காணவில்லை என்றும் சம்பவம் தொடர்புடைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிரிந்திவெலப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

# 4 ஆயிரம் ஹெரோய்ன் பக்கெட்டுடன் இரு சந்தேக நபர்கள் நேற்று கைது

(கொழும்பு)

மிரிஹான சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து 4 ஆயிரம் ஹெரோய்ன் பக்கெட்கள் வைத்திருந்த நபரொருவரை, அதுருகிரியப் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மோட்டார் சைக்கிளிலே குறித்த ஹெரோய்ன் பக்கெட்களை மறைத்து வைத்துக்கொண்டு சென்ற வேளையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து அருகிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் பிறிதொரு சந்தேக நபரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த இரண்டாவது சந்தேக நபரிடமிருந்து மோட்டார் சைக்கிள்கள் மூன்று, அலைபேசிகள் ஐந்து, பணம் எண்ணும் இயந்திரம் மற்றும் ஹெரோய்ன் தூள் பொதி செய்யும் இயந்திரம் ஆகியவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த இரு சந்தேகநபர்களையும், கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் இன்று வியாழக்கிழமை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-12)

லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி

# தன்னை கடத்திய இராணுவத்தை நேற்று அடையாளம் காண்பிப்பு

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினரே தன்னைக் கடத்திச் சென்றதாக லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி நேற்று அடையாளம் காட்டியுள்ளார்.

சந்தேக நபர் நேற்று கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போதே சாரதி அவரை அடையாளம் கண்டுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைச் சமபவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் இராணுவ சார்ஜன் மேஜர் ஒருவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர் நேற்று கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டார்.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டு சில தினங்களின் பின்னர் அவரது சாரதி கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

நேற்று இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின் போது குறித்த சார்ஜனே தன்னைக் கடத்திச் சென்றதாக லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி அடையாளம் கண்டுள்ளார். (செ-11)

# இளைஞன் மீது தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத இருவர் பின்னால் வந்து கொட்டன்களால் தாக்கியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் யாழ்.சித்தன் கேணி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த தங்கராசா நிரூஜன் (வயது 20) என்ற இளைஞனே படுகாயமடைநத வராவார்.

இது தொடர்பில் வட்டுக் கோட்டை பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. (செ-30)

# தொண்டைமானாறு தடுப்பணை புனர்நிர்மாண பணி ஆரம்பம்



(கரணவாய்)

தொண்டைமானாறு தடுப்பணையின் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகியுள்ளது. உலக வங்கியின் 399 மில்லியன் ரூபாய் நிதியில் நிறைவேறவுள்ள இந்தப் புனரமைப்பு வேலைகளை வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நேற்று புதன்கிழமை ஆரம்பமானது.

தொண்டைமானாறு உவர் நீரேரியில் மழைநீரைச் சேமிக்கும் நோக்கிலும், கடல்நீர் ஏரிக்குள் வராமல் தடுக்கும் நோக்கிலும் ஏற்கெனவே தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மடைக்கதவுகள் உருக்கினால் ஆனவை என்பதால் துருவேறிப் பழுதடைந்து காணப்படுகின்றன.

தற்போது 300 மில்லியன் ரூபாய் செலவில் துருப்பிடிக்காத உருக்கினாலான மடைக்கதவுகளைக் கொண்டதாகத் தடுப்பணை புனரமைக்கப்பட உள்ளது.

தொண்டைமானாறு ஏரியில், தடுப்பணையின் மடைக்கதவுகளை மூடி மழைநீரைச் சேகரிக்கும்போது தாழ்வான வயல்கள் மற்றும் குடியிருப்புப்பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துகொள்கிறது. இதனைத் தடுக்கும் நோக்குடன் இரண்டு இடங்களில் வெள்ளத் தடுப்பணைகளும்கட்டப்பட உள்ளன.

சீமெந்துக் கட்டுமானப் பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்பணைகளுக்கென 99 மில்லியன் ரூபாய் செலவிடப்பட உள்ளது. வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இப்புனரமைப்பு வேலைகள் யாவும் இரண்டு வருடங்களில் முடிவடைய உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன், த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் க.சிவாஜிலிங்கம், க.தர்மலிங்கம், சி.அகிலதாஸ், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி வே.பிறேமகுமார், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ந.சுதாகரன், பிரதிப் பிரதம செயலாளர் சோ.சண்முகானந்தன் ஆகியோருடன் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள். (செ-60)

# பௌத்த சமயம் பாதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கேன் – ஜனாதிபதி

(கொழும்பு)

நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பில் பௌத்த சமயம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதை அகற்றி புதிய அரசியல் யாப்பை தயாரிப்பதாக முன்னெடுக்கப்பட்டு வரும் பிரசாரங்கள் முற்றிலும் போலியானவை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மகா சங்கத்தினருக்கோ அல்லது பௌத்த சமயத்திற்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் எவ்வித நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காது எனத் தெரிவித்தார்.

பௌத்த மக்கள் உள்ளடங்கலாக எல்லா சமயங்களும் எல்லா இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய அரசியல் யாப்பை நாட்டுக்கு முன் வைப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று பிற்பகல் கெட்டம்பே மகாநாம கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய பிரிவெனாதின அரச நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (செ-11)

# சங்கிலித்திருடன் மடக்கிப் பிடிப்பு

(மல்லாவி)

இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த இளம் குடும்பப் பெண்ணின் தங்கச்சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிக்க முயற்சித்த இளைஞனை அவ்விடத்தில் நின்ற முச்சக்கரவண்டி சாரதிகள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து துணுக்காய் நோக்கி பிரயாணம் செய்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மாங்குளம் நகர் பகுதியில் தரித்து நின்றுள்ளது.

இதன்போது அப்பேருந்தில் பயணமான இளம்பெண்ணின் 3 பவுண் தங்கச் சங்கிலியை இளைஞன் ஒருவர் அறுத்துக் கொண்டு தப்பித்து ஓட முற்பட்டுள்ளார்.

உடனடியாக அப்பெண் கூக்குரல் இடவே அயலில் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் இருந்த முச்சக்கர வண்டி சாரதிகள் அவ் இளைஞனை மடக்கிப் பிடித்து நையப்புடைத்து மாங்குளம் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். (செ-15,281)

# கைதான 6...

யூரி சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த இந்த விசாரணைக்கு குறித்த சாட்சிகளில் 40 பேர் அழைக்கப்பட்டு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

சாட்சி விசாரணைகளின் போது, தமது உறவினர்களை இராணுவத்தினர் சுட்டுகொலை செய்ததை தாம் நேரில் கண்டதாக குமாரபுரத்தைச் சேர்ந்த பலர் சாட்சியமளித்திருந்தனர்.

பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்குமாறு சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான அரச அரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி சுதர்ஷன் டி சில்வா கோரிக்கை விடுத்திருந்தார்.

முறைப்பாட்டாளர்கள் பிரதிவாதிகளைக் குற்றவாளிகளாக நிரூபிப்பதற்கு போதுமானளவு ஆதாரங்களை முன்வைக்கத் தவறியுள்ளதாக பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் இதன்போது வாதிட்டிருந்தனர்.

இந்நிலையில் யூரிகளின் ஆலோசனையின் படியும் வழக்கு விசாரணையின் போக்கிலும் சாட்சியங்களில் காணப்பட்ட முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டு பிரதிவாதிகள் 6 பேரையும் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவித்து விடுதலை செய்வதாக அநுராதபுர மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுளா திலகரட்ண அறிவித்துள்ளார். (செ-11)

# தமிழ் மாணவர்கள் மீது...

கூரே யார் செய்தாலும் தவறு தவறுதான் என்றேதான் குறிப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்.ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தாவது,

இலங்கை பல்லின, மத, கலாசாரம், மொழிகளைக் கொண்ட ஒரு நாடு. இந்த நாட்டில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக இரத்த ஆறு ஓடியது.

அந்தக் கசப்பான அனுபவங்கள் மறக்கப்பட சமாதானமும், நல்லிணக்கமும் கட்டியெழுப்பப்படும் சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நல்லிணக்கம் ஏற்படுமாயின் மீண்டும் இந்த நாட்டில் யுத்தமொன்று ஏற்படாது. ஊடகங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் தெற்கிலும், வடக்கிலும் வேறுபட்டவையாக உள்ளன.

தெற்கில் உள்ள பத்திரிகைகள் சிங்களவர்களைத் தூண்டுகின்றன. வடக்கிலுள்ள பத்திரிகைகள் தமிழ் மக்களைத் தூண்டுகின்றன.

ஆனால், அதுவல்ல உண்மை. செய்திக்குப் பதிலாக எழுதுபவர்களின் அபிப்பிராயங்களே அதிகம் உள்ளன. குறிப்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்கு சிங்கள மாணவர்களைத் தூண்டியது நான் என செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் எனக்கு எதுவுமே தெரியாது. இவ்வாறான கருத்துக்கள் இனவாதத்தை மீண்டும் தூண்டும். நயினாதீவில் புத்தர் சிலையை உருவாக்குவதும் நான் என்கின்றனர்.

எனக்கும் அதுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவ்வாறு பொய்யான செய்திகள் வெளியிடப்படுவதால் என்னைப் பற்றிய தப்பான அபிப்பிராயங்கள் தமிழர்கள் மத்தியில் தோற்றுவிக்கப்படும் என்பதுடன், என்னை இனவாதியாகப் பார்ப்பார்கள்.

யாழ்.பல்கலைக்கழகப் பிரச்சினையை தமிழ் மாணவர்கள் தான் ஆரம்பித்தனர் என நான் கூறியதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன அவ்வாறு நான் சொல்லவில்லை. யார் செய்தாலும் தவறு தவறுதான் என்றுதான் தெரிவித்தேன். நான் ஒருபோதும் இனவாத அரசியல் செய்பவன் அல்லன். ஊடகங்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான காலம் இது என வடக்கு ஆளுநர் ஜெரினோல்ட் கூரே தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திஸ்ஸவுக்கு...

காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிய திஸ்ஸ அத்தநாயக்க, மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இவருக்கு சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்கள் வரை அப்பதவியில் பணியாற்றியிருந்தார்.

இக்காலப்பகுதியில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி இவர் ஆவணமொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த ஆவணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் முறையிட்ட ரணில் விக்கிரமசிங்க, இவ்வாறான இரகசிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவில்லை என்றும், அதிலிடப்பட்டுள்ள கையெழுத்துக்கள் போலியானவை எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட திஸ்ஸ அத்தநாயக்க விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிரான விசாரணைகள் முடிவடைந்துள்ளதாக தெரிவித்துள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினர், சட்டமா அதிபரிடம் ஆலோசனையை பெறுவதற்காக இந்த விசாரணை அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டுள்ள ஆவணத்தில் இடப்பட்டிருந்த கையெழுத்துக்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் விரைவில் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-11)

## கூட்டு எதிரணியின்...

வித்துள்ளது.

கண்டி தலைமையக பொலிஸ் பரிசோதகர் விடுத்த கோரிக்கையை அடுத்து இவ்வாறு அறிவித்துள்ள நீதிமன்றம் இது தொடர்பில் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் கபீர் காசீம் ஆகியோருக்கு அறிவித்துள்ளது.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி இடம்பெறவுள்ள பாதயாத்திரை திட்டமிட்டப்படி இன்று ஆரம்பிக்கப்பட்டு திங்கட்கிழமை கொழும்பை நோக்கி சென்றடையும் என கூட்டு எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்தன சூளுரைத்துள்ளார். (செ-11)

## எமது காணி...

வலி.வடக்கில் மக்களுடைய காணிகளை விடுவிக்காத இராணுவம் அந்த காணிகளில் கிரிக்கெட் விளையாடி வருகின்றது. இராணுவத்தினர் கிரிக்கெட் விளையாடுவதற்கு எமது காணியா வேண்டும்? எமக்கு சொந்த நிலமிருந்தும் நாங்கள் அகதி முகாம்களில் ஓலைக்குடிசையில் வாழ்க்கை நடத்த, இராணுவம் எமது காணிகளில் கிரிக்கெட் விளையாடி மகிழ்கின்றது. இதுவா நல்லாட்சி? எனவும் அந்த மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் உள்ள இடத்திலேயே இவ்வாறு இராணுவத்தினரும் பொலிஸாரும் கிரிக்கெட் விளையாடி வருகின்றனர். இந்த இடம் சுமார் ஒரு ஏக்கர் அளவு காணப்படும் நிலையில் இதனை மைதானமாக்கி கிரிக்கெட் விளையாடி வருகின்றனர்.

நடேஸ்வரா கல்லூரியை சூழ இராணுவ காவலரண்கள், இராணுவத்தின் சிற்றுண்டிச்சாலை என பலதரப்பட்ட இராணுவ செயல்பாடுகள் தற்போதும் இயங்கி வரும் நிலையில், பொலிஸ் நிலையம் என இராணுவ நடமாட்டத்திற்கு மத்தியில் கல்லூரி செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த நிலையிலே இராணுவம் இந்த கிரிகெட் விளையாட்டையும் ஆரம்பித்துள்ளது.

இந்த விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடம் ஏற்கெனவே நடேஸ்வரா கல்லூரியின் விளையாட்டு மைதானமாக காணப்படுகின்ற நிலையில், அதனை மேலும் மக்களுடைய காணிகளுக்குள் விஸ்தரித்து விளையாட்டு மைதானம் முழுவதினையும் தாமே பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு அருகில் இராணுவ சிற்றுண்டிசாலையும் ஒன்று இயங்குகின்றது. இதுவும் மக்களுடைய காணிகளுக்கு உள்ளேயே அமைந்துள்ளது.

தற்போது வலி.வடக்கில் 5 ஆயிரத்து நூறு ஏக்கர் இராணுவ வசம் இருக்கும் நிலையில், அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்பு காணப்பட்டதனை விட மந்த கதியிலேயே செல்வதாகவும்; நடேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் உள்ள அனைத்து இடங்களும் விடுவிக்கப்படுவதன் மூலமே மாணவர்கள் சுதந்திரமான கல்வியை கற்க முடியும் எனவும் வலி.வடக்கு மீள்குடியேற்ற தலைவர் குணபாலசிங்கம் வலம்புரியிடம் தெரிவித்தார்.

மேலும் வலிகாமம் வடக்கு வயாவிளான் பிரதேசம் மக்களின் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்ற போதிலும் இங்குள்ள ஒட்டகப்புலம் என்ற இடத்தில் படையினர் நிரந்தரமாக இராணுவ முகாம் ஒன்றை அமைத்து அது நிறைவுறும் கட்டத்தை தற்போது எட்டியுள்ளது. நூற்றி ஐந்து குடும்பங்களுக்கு சொந்தமான மேற்படி 169 ஏக்கர் காணியை படையினர் சுவீகரிக்கும் நோக்கில் நிரந்தரமாக முட்கம்பி வேலிகளை அமைத்துள்ளதுடன் பாரிய வாயிற் துண்களையும் நிறுவி வருகின்றனர்.

கடந்த 26 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த வசாவிளான், கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் பகுதியளவில் விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒட்கப்புலம் பகுதி முழுமையாக இராணுவத்தின் வசம் இருந்து வருகின்றது.

இங்கு நிலை கொண்டுள்ள குறித்த இரு இராணுவ முகாம்களும் வீதியின் இருபக்கத்திலும் காணப்படுகின்றன. வீதி மக்களின் பாவனைக்கு விடுக்கப்பட்டுள்ளது. வசாவிளான் பகுதியில் பொதுமக்களின் பாவனைக்கு விடுக்கப்பட்டிருந்தாலும் முழுமையாக விடுக்கப்படாமல் இராணுவமயமாக்கப்பட்டுள்ளது. ஒட்டகப்புலத்தில் வீதிக்கு முன்புறமாக தற்காலிக வீடு ஒன்று அமைக்கப்பட்டு, தமது காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் சில குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன. இந்த இடத்திக்கு மிக அருகாமையில் நிலை கொண்டுள்ள 511ஆவது படையணி மற்றும் 07ஆவது விஜயபாகு படையணிகள் வழமை போன்ற தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதிகரித்த இராணுவ நடமாட்டம் காரணமாக இராணுவத்தோடு அங்கிருப்பது அச்சத்தை ஏற்படுத்துவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஒவ்வொரு நாளும் வலி.வடக்கில் புதிய புதிய செயற்பாடுகளில் இராணுவம் ஈடுபட்டு வருவதாகவும், இதன் மூலம் அங்கு மீள்குடியேறும் மக்கள் உள ரீதியாக பாதிப்படைய செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (செ-4)

## மாற்றுப் பாதையில்...

ரையை முன்னெடுப்பதற்கானஅனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நீதிமன்றத்தின் தீர்ப்பை தவறாகப் புரிந்து கொண்ட பொலிஸார் பாதயாத்திரையை நீதிமன்றம் தடுத்துள்ளதாக கூறி போலி பிரசாரங்களை முன்னெடுத்துள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். (செ-11)

## சிங்கள மாணவர்...

மல் இருப்பது குறித்து பொலிஸார் எதுவும் செய்ய முடியாது. சிங்கள மாணவர்களின் பாதுகாப்பை முன்னிட்டு பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தில் சிவில் உடையில் ஏராளம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் சீருடையிலும் பொலிஸார் கடமையில் உள்ளனர். இவற்றுக்கு மேலதிகமாக புலனாய்வுப் பிரிவினரும் தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வளவுக்கும் பின்னர் சிங்கள மாணவர்கள் வருகை தராமல் இருப்பது அவர்களின் சுயதீர்மானமாகும். அதில் யாரும் எதுவும் செய்ய முடியாது.

ஒருசில ஊடகங்களில் குறிப்பிடுவது போன்று யாழ்.பல்கலைக்கழக சூழல் கொந்தளிப்பானதாக இல்லை.

வழமை போன்று அமைதியாகவே காணப்படுகின்றது என்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (செ-11)

## இலங்கைக்கு...

கங்களும் சமாதானத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கான அனைத்து செயற்பாடுகளுக்கும் உதவியளிக்க கனடா தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சர்வதேசத்திடம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும். இதற்கும் கனடா ஒத்துழைப்பு வழங்கும்.

இந்த விடயங்கள் தொடர்பில் தாம் இலங்கையில் தங்கியிருக்கும் போது அவதானம் செலுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் நேற்று இரவு கொழும்பு வந்துள்ள நிலையில், இன்று தொடக்கம் பல்வேறு உயர்மட்ட சந்திப்புகளை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## புதிய அரசியலமைப்பு...

றோம். அதனூடாக ஒரு முடிவுக்கு வரமுடியும். பாராளுமன்றம் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

## கைதான 6 இராணு...

கடந்த 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இரவு மதுபோதையில் குறித்த கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தினரால் பெண்கள், குழந்தைகள் உட்பட 26 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதுடன் 39 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த படுகொலை வழக்கில் தெகியத்த இராணுவ முகாமில் சேவையிலிருந்த 8 இராணுவ வீரர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் இருவர் உயிரிழந்த நிலையில்

அரச உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான வகுப்புகள். D.O PMA (I,II,III)
வகுப்புக்கள் ஆரம்பம் : இன்று (28.07.2016) வியாழன் 5.00 pm (EB - திரு.சத்தியமூர்த்தி)
மேற்படி வகுப்புக்கள் சனி.ஞாயிறு தினங்களில் வடமராட்சி உத்தியோகத்தர்களின் நன்மை கருதி எமது நிறுவனத்தில் பிரபல ஆசிரியர் குழாமினால் நடாத்தப்படுகின்றன
EB - திரு. சத்தியமூர்த்தி (AO)
FR - திரு. கலைச்செல்வன் (Acct)
IT - பிரபல ICT ஆசிரியர்
NSB வங்கியின் மேல்மாடி கொடிகாமம் வீதி, நெல்லியடி.
(C-5309) T.P No : 077 8760 992 077 344 3962

1996ஆம் ஆண்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் எஞ்சிய 6 பேரும் சாட்சிகளினால் அடையாளம் காணப்பட்ட நிலையில் திருகோணமலை மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

அன்றைய யுத்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரிகளின் வேண்டுகோளின் பேரில் பாதுகாப்பு கருதி சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த வழக்கு அநுராதபுரம் மேல்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் கண்டவர்கள், சிவில் சமூகத்தினர் உட்பட 121 பேர் சாட்சிகளாக மூதூர் பொலிஸாரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## முதியவர்...

கிளிநொச்சி உருத்திரபுரம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் உள்ள வாய்க்காலிலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்று பதினோரு மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

சடலமாக கண்டுபிடிக்கப்பட்டவர் உருத்திரபுரம் சிவநகர் பாடசாலைக்கு அருகில் வசிக்கும் எழுபத்து ஐந்து வயதான இராமு சண்முகம் என்ற முதியவர் என கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர் .

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று உருத்திரபுரம் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து ஜெயந்திபுரத்தில் உள்ள தனது மகளை பார்வையிடுவதற்காக காலை எட்டு மணியளவில் சென்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்

நேற்று 10.50 மணியளவில் வீதியால் சென்றுகொண்டிருந்த பயணி ஒருவர் குறித்த வாய்க்கால் பகுதியில் சடலம் இருப்பதனை அவதானித்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதனை அடுத்து, சம்பவ இடத்திற்கு வருகைதந்த கிளிநொச்சி பொலிஸார் மற்றும் குற்றத்தடயவியல் பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

அத்துடன் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் நீதிபதி மற்றும் சட்டவைத்திய அதிகாரி முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைத்து பிரேதபரிசோதனைக்கு உட்படுத்தப்பட இருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்

குறித்த சம்பவம் தொடர்பாக முதியவர் தடுமாறி வாய்க்காலில் வீழ்ந்தாரா அல்லது விபத்தினால் வாய்க்காலினுள் வீழ்ந்து இறந்தாரா எனும் பல கோணங்களில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-15,254,281,312)

## க.பொ.த (உ/த)...

ங்கள், அச்சு ஊடக வெளியீடு, ஆவணங்கள் விநியோகம் அத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம். என். ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

குறித்த இத் தடையை மீறியவர்கள் தொடர்பில் பொலிஸ் அவசர பிரிவு தொலைபேசி இலக்கம், பொலிஸ் தலைமையகம், அத்துடன் பரீட்சைகள் திணைக்களம் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (செ-11)

தேவை
அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட குளிர்பான நிறுவனமொன்றிக்கு (carbonated soft Drinks) வட கிழக்கு மாகாணங்களில் விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு :- 077 7272 762 077 6618 815

நீங்கள் இம்முறை
A/L பரீட்சைக்கு தோற்றுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE ▸ DIPLOMA ▸ DEGREE
With FREE English Course
2016 A/L மாணவர்கள் JULY 30 முதல் பதிவினை மேற்கொண்டு 50% கட்டணக் கழிவினை வெல்லுங்கள்!
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY Business · Hospitality · English SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk Sikaram Academy 021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(சி-5313)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-5312)
CNR World wide Express No.401 Clock tower road Jaffna. (பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

அரச அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான (D.O) பயிற்சி வகுப்பு
அரச அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான (மாகாண சபை) 1ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்:- 30.07.2016 2PM
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P No: 021 222 8148, 0778469721 (சி-5306)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-22

பகுதி-II **தமிழ்க் கல்விக் கழகம்** நேரம்:- 1 மணி 45 நிமிடங்கள்

◆பின்வரும் பந்தியினை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

01)ஒரு நாட்டில் பெருமை அங்குள்ளவர்கள் கல்வியிலேயே தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்கு காரணமாக அமையும் நூல்களை நாம் கண்கள் போல போற்றுவது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் காணப்படும் நூல்களைக் கிழிக்காமல் பக்குவமாக பயன்படுத்தி அவற்றால் மற்றையவர்களும் பயனடைய செய்தல் வேண்டும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற முதுமொழிக்கமைய நாமும் வாழ்ந்து பயனடைதல் வேண்டும்.

1.பந்தியில் கூறப்பட்டுள்ள பிரதான கருத்து யாது?

............................................................

2.ஒருநாட்டில் பெருமை எதிலே தங்கியுள்ளது

............................................................

3.பந்தியில் கூறப்பட்டுள்ள உவமையினை எழுதுக.

............................................................

4.இங்கு கூறப்பட்டுள்ள இடப்பெயர்கள் 2 இனை எழுதுக.

............................................................

5.பந்தியில் கூறப்பட்டுள்ள முதுமொழியினை எழுதுக.

............................................................

6.நூல்களை கவனமாக பேணும் முறையினைக் குறிப்பிடுக.

............................................................

7.இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சினைப் பெயரினை எழுதுக.

............................................................

02)பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியங்களாக எழுதுக.

i) மாணவன் புகைவண்டியில் பிரயாணஞ் செய்தான்.
மாணவன் பாடசாலையை அடைந்தான்.

............................................................

ii) புகைவண்டியில் மின் விசிறியைக் காணவில்லை
புகைவண்டியில் மின்விளக்கின் முடிகளைக் காணவில்லை

............................................................

03)பின்வரும் தொடர்மொழிகளுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1.நூறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி

............................................................

2.சூரியன்,சந்திரனைச் சுற்றி தோன்றும் ஒளிவட்டம்

............................................................

3.இலை,குழை,தழைகளால் வேயப்பட்ட குடிசை

............................................................

04)மரபுத்தொடர்களின் கருத்தினை எழுதுக.

i) தாளம் போடுதல்............................................

ii) பல்லிளித்தல்............................................

iii) காலூன்றுதல்............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05)பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

i. உண்ணாச் சொத்து மண்ணாய் போகும்............................................................

ii. விளையும் பயிரை முளையில் தெரியும்............................................................

iii. பேராசை பெருந்தரித்திரம்............................................................

06)பொருத்தமான வெற்றிடங்களை நிரப்புக.

1.தலைக்கு தொப்பி போல விரல்களுக்கு............................................................

2.யானையின் ஆண் களிறு போல மானின் பெண்............................................................

3.பாடசாலை அதிபர் போல வைத்தியசாலை............................................................


4.பலாவின் உள்ளீடு சுளைபோல மாவின் உள்ளீடு............................................................

07)பின்வரும் பாடல்களின் விடுபட்ட பகுதிகளை பூரணப்படுத்துக.

i). சுற்றும்..........................................................பார்த்தனள்
..................................காணோம்..................................
சட்டை..........................................................பாதியாய்த்
..................................................கிழித்தனள்

ii) ஓவியம் தருவாய்..........................................................
..................................................கவிதையூட்டக்
காவியம்..........................................................மக்கள்
..................................................சிரிப்பு
மேவிடும்..........................................................சொல்வாய்

08)பின்வரும் உருக்களின் சிங்களப் பெயர்களை தமிழ் உச்சரிப்பில் எழுதுக.


..............................


..............................


..............................

09)பின்வரும் சிங்கள வாக்கியங்களின் தமிழ் கருத்தினை எழுதுக.

1.மம கம புத்தள............................................................

2.பரிப்பு கிலோவக் கீயத............................................................

10) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க்கருத்தினை எழுதுக.

i. Light house............................................................

ii. Water falls............................................................

iii. Pine apple............................................................

iv. Poya day............................................................

11) “ எமது நாட்டின் இயற்கை வளம்” என்ற தலைப்பில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் கூடிய 3 வாக்கியங்களை எழுதுக.

............................................................

............................................................

............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) பொருத்தமான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. இருபத்தேழாயிரத்து நானூற்று எட்டு என்பதன் எண்குறியினை எழுதுக.

.......................................................................................................................

2. 8m நீளமான றிபனில் இருந்து அதன் அரைவாசியிலும் 50cm குறைவாக வெட்டியெடுக்கப்பட்டது எனின் எஞ்சிய றிபனின் அளவினை cm இல் எழுதுக

.......................................................................................................................

3. ஒரு மேசைக்கரண்டி கொள்ளும் திரவத்தின் அளவு யாது?

.......................................................................................................................

4. நான்கு முக்கோண முகங்களையும் ஒரு சதுர முகத்தினையும் கொண்டு உருவாக்கக்கூடிய திண்ம உருவின் பெயர் யாது?

.......................................................................................................................

5. 5வது சதுர எண்ணையும் 4வது முக்கோண எண்ணையும் கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?

.......................................................................................................................

6. நான்கு தீக்குச்சிகளைக் கொண்டு உருவாக்க கூடிய உரோமன் எண்கள் இரண்டினை எழுதுக.

.......................................................................................................................

7. 1kg கடலை 5 பேருக்கு போதுமானது எனின் 18 பேர் உண்பதற்கு தேவையான கடலையின் அளவு யாது?


.......................................................................................................................

8. 240m நீளமான பாதைக்கு 8 இடைவெளியில் தூண்கள் போட வேண்டுமெனில் தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?.......................................................................................................................

9. 1 kg பருப்பின் விலை ரூபா 160.00 எனின் 650g பருப்பின் விலை யாது?

.......................................................................................................................

10.





1. உருவின் சுற்றளவு யாது?

.......................................................................................................................

2. உருவின் பரப்பளவு யாது?

.......................................................................................................................

13) பின்வரும் பெரியார்களின் பெயர்களை எழுதுக.

1.  2.  3.  4. 

_______________ _______________ _______________ _______________

14) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து கோடிடுக.

1. இலங்கையில் தேசிய மலராக அல்லி பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு

1) 1986 2) 1996 3) 2016 3) 2006

2. குவாசியக்கோர் ஏற்படுவது எக் குறைபாட்டினால் ஆகும்.

1) விற்றமின் A 2) புரதம் 3) மாப்பொருள் 4) கொழுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.கறுப்பு நிற முட்டையினை இடும் உயிரினம்

1.முதலை 2.நுளம்பு 3.தேரை 4.நத்தை

4. பின்வரும் வித்துக்களில் பச்சை நிறமுடைய வித்து

1.கௌப்பி 2.உழுந்து 3.கடலை 4.பயறு

5.இலவச சீருடை வழங்குவதனை ஆரம்பித்து வைத்தார்.

1.J.R ஜெயவர்த்தன 2.R. பிரேமதாஸ 3.கன்னங்கரா 4.மகிந்த ராஜபக்ஷ

6.திஸவாவியை அமைத்த மன்னன்

1.மகாசேனன் 2.துட்டகைமுனு 3.தாதுசேனன் 4.தேவ நம்பிய தீசன்

7.போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி எண்.

1)1929 2) 1955 3) 1977 4) 1969

8.பொலித்தீன் கழிவுகளை இடும் குப்பைக் கூடையின் நிறம்

1.மஞ்சள் 2.நீலம் 3.சிவப்பு 4.பச்சை

9.தென் மாகாணத்தில் கடலில் கலக்காத ஆறு

1.யாழ்ப்பாணம் 2.குருநாகல் 3.பொலநறுவை 4.அநுராதபுரம்

10.அதிகளவு குளங்கள் காணப்படும் மாவட்டம்

1.யாழ்ப்பாணம் 2.குருநாகல் 3.பொலநறுவை 4.அநுராதபுரம்

11.துளைக் கருவி வகையினுள் அடங்கும் இசைக்கருவி


1.கொம்பு 2.யாழ் 3.தபேலா 4.மணி

12.விண் வெளி தொடர்பான ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்

1.பாதுக்கை 2.திருகோணமலை 3.கொழும்பு 4.மன்னார்

13.தெங்கு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்

1.லுணுவில் 2.குருநாகல் 3.அகலவத்தை 4.மகா இலுப்பள்ளமை

14.  உருவில் உள்ள அலகுக் குரிய பறவை

1.காகம் 2.கிளி 3.புறா 4.பருந்து

15.ஒலிம்பிக் கொடியில் உள்ள மஞ்சள் நிற வளையம் குறிப்பது

1.ஆசியா 2.ஐரோப்பா 3.அமெரிக்கா 4.ஆபிரிக்கா

16.முதலாவது அதிவேக விரைவுப்பாதை அமைக்கப்பட்ட மாகாணம்

1.வட மாகாணம் 2.தென் மாகாணம் 3.மேல் மாகாணம் 4.சப்ரகமுவ மாகாணம்

17.மது ஒழிப்பு இயக்கத்தினை ஆரம்பித்த பெரியார்

1.வண.எஸ் மகிந்தா 2.சித்திலெப்பை 3.டி.பி.ஜயதிலக 4.விபுலானந்தர்

18.அலங்காரத் தையல் வகையினுள் அடங்குவது

1.சோம் தையல் 2.சங்கிலித் தையல் 3.சிறு நூலோடி 4.விஸ்பம்

19.மஞ்சள்+ நீலம் ஆகிய நிறங்களைக் கலப்பதனால் பெறப்படும் நிறம்

1.செம்மஞ்சள் 2.ஊதா 3.கபிலம் 4.பச்சை

20.கூடைப்பந்தாட்ட குழுவில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை

1) 7பேர் 2) 5 பேர் 3) 11 பேர் 4) 6 பேர்.

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெள்ளிக்கிழமை (29.07.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)

★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)

★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org